RECEIVED 1980-5-12 PERIODICALS DIVISION UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS LIBRARY

தரத்தினில் சிறந்த
யானை மார்க்
ஓடுகளையே பாவியுங்கள்
மூ. தா. பொன்னம்பலம்
36, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 | சித்திரை 21 | ஜு-ஆகிர் 17 | இதழ் 83
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 3-5-80

### உடுப்பிட்டி எம். பி. ஆட்சேபம்

(புலோலி)
வல்வெட்டித்துறை [illegible] அரசினர் வைத்திய சாலையில் கடமையாற்றிய டாக்டர் சிவநேசராசா மந்திகை அரசினர் வைத்திய சாலைக்கு இடமாற்றம்செய்யப் பட்டதை ஆட்சேபித்து உடுப்பிட்டி எம் பி. திரு. த. இராஜலிங்கம், சுகாதார அமைச்சருக்கு தந்தி அனுப்பியுள்ளார். (க)

70 - 77ம் ஆண்டு காலப்பகுதியில்

# கூட்டுறவுச்சங்கங்களில் ஊழல்

# ரூ 7 கோடி 23 லட். அறவிட முடிவு

## சட்ட மூலம் திருத்தப்படும் அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

**1970ம் ஆண்டுமுதல் 77-ம்ஆண்டுவரை கூட்டுறவுச்சங்கங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பாக சங்க நெறியாளர்கள், ஊழியர்களிடமிருந்து 7 கோடியே 23லட்சம் ருபா அறவிடவேண்டிய நிலையில் உள்ளது.**

இப்பணத்தை விரைவில் அறவிடுவதற்கு விரைவில் பராளுமன்றத்தில் திருத்த சட்டமூலம் ஒன்று கொண்டு வரப்படவுள்ளது

இதற்கான அங்கீகாரத்தை உணவுக்கூட்டுறவு அமைச்சர் திரு எச் பி. ஹேரத்துக்கு அமைச்சரவை அளித்துள்ளது

70 - 77-ம் ஆண்டு காலப் பகுதியில் ஊழல், மோசடி இடம்பெற்ற 290 கூட்டுறவுச் சங்கங்களில் விசாரணை நடத்தியதன் பயனாகவே இது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

முன்னைய இயக்குநர்கள், ஊழியர்கள், மற்றும் இன்

(8-ம் பக்கம் பார்க்க)

## எம்ஜி ஆர் இரண்டு இடங்களில் போட்டி

சென்னை, மே 2
அ. தி. மு. க. தலைவரும் கலைக்கப்பட்ட சட்டசபையில் தமிழகத்தின் முதல் அமைச்சராகப்பதவி வகித்து வருமான திரு. எம். ஜி. இராமச்சந்திரன் எதிர்வரும் சட்ட சபைத்தேர்தலில் இரண்டு தொகுதிகளில் போட்டியிடுகிறார்.

மதுரை மாவட்டத்தில் உள்ள மதுரை மேற்கு தொகுதியிலும் ஆண்டிப்பட்டி தொகுதியிலும் போட்டி யிடுவதற்கு திரு. இராமச்சந்திரன் இன்று தமது வேட்பு மனுக்களைக் தாக்கல் செய்தார்.

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி சென்னை அண்ணாநகர் தொகுதியில் போட்டியிடுவது தெரிந்ததே. (இ)

### சென்னை உயர்நீதிமன்றத்தில் வெடிகுண்டுபுரளி

சென்னை, மே, 2
சென்னை உயர் நீதிமன்றத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாகப் பொலிசாருக்குக் கிடைத்த அனாமதேய தொலைபேசி அழைப்பை அடுத்து இன்று நீதிமன்ற அலுவல்கள் யாவும் சுதம்பித்தன காலை 11 மணிக்கு கிடைத்த தகவலை அடுத்து நீதிபதி சட்டத்தரணிகள்

(8-ம்பக்கம் பார்க்க)

## பட்டதாரி மாணவருக்கு ஆசிரிய நியமனம்

(கொழும்பு)
பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானத் துறையில் கல்விகற்கும் மாணவர்களுக்கு இரண்டு ஆண்டு பல்கலைக்கழகப்படிப்பு முடிந்ததும் தராதரப்பத்திர மற்ற ஆசிரிய நியமனம் வழங்கப்படும்

இவ்வாறு நேற்றைய மந்திரிசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது,

கல்வி அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்காவின் இந்தத் திட்டத்தை மந்திரி சபையில் அங்கீகரிக்கப்பட்டது

இரண்டு ஆண்டு காலப் படிப்பை முடித்த பின்னர் ஆசிரியர் நியமனம் பெறும் மாணவர்களுக்கு அவர்களது பட்டப்படிப்பை பூர்த்திசெய்த பின்னர் பட்டதாரி ஆசிரியர் சம்பளம் வழங்கப்படும். (ம-இ)

துணுக்காய் கொள்ளை

## சந்தேகநபர்கள் யானைக் காட்டில் சிக்கியுள்ளனர்?

(யாழ்ப்பாணம்)
துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச்சங்க கொள்ளை தொடர்பான சந்தேக நபர்கள் யானைக்காட்டில் சிக்கி அவஸ்தைப்படுவதாக பொலிஸ் வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

காட்டைச்சுற்றியுள்ள சகல பகுதிகளும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன் இராணுவத்தினர் அப்பகுதியில் சோதனைநடத்தி வருகின்றனர்.

இதேசமயம் துணுக்காய் ப. நோ கூ. சங்க ஊழியர்கள் அப்பகுதியிலுள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று திடீர் சோதனை நடத்திய போதும் சந்தேகநபர்கள் சிக்கவில்லை

சந்தேக நபர்கள் சிக்கியிருப்பதாக பொலிஸார் சந்தேகிக்கும் யானைகள் நடமாடும் அக்காட்டுப்பகுதிக்குள் எவரும் செல்வதில்லையென அக்காட்டுக்கு வெளியே வாழும் மக்கள் தெரிவித்தனர்.

இக்கொள்ளை தொடர்பாக விசாரணை நடத்த அங்கு விசேட குழு ஒன்று இயங்கி வருகிறது. (க-இ)

### அஸாமில் அமைதி

ஹௌகாத்தி, மே 2
அஸாமில் நீண்ட நாட்கள் அமைதியின்மைக்குப் பின்னர் இன்று அமைதி நிலவியது என்றும் அலுவலகங்கள் யாவும் வழமைபோல் இயங்கின என்றும் அறிவிக்கப்பட்டது.

சமாதானத்தையும் அமைதியையும் வலியுறுத்தும்வகையில் மக்கள் வெள்ளை ஆடைகளை அணிந்திருந்ததுடன் வீடுகள் கடைகளில் வெள்ளைக்கொடிகளைப்பறக்க விட்டிருந்தனர் (இ)

★ செல்வா நினைவாலயத்துக்கு

## இந்திராகாங்கிரஸ் பிரமுகர்கள் மலரஞ்சலி

### 'அமிர்' ஹமீத்தை இன்று சந்திப்பர்

(யாழ்ப்பாணம்)
தமிழ்நாடு இந்திரா காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் பிரமுகர்கள் நேற்றுக்காலை தந்தை செல்வா நினைவாலயத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் முஸ்லிம் பேரவையின் செயலாளருமான ஜனாப் எஸ். எம். ஹிதாயத்துல்லா மற்றும் இவருடன் வந்த காங்கிரஸ் பிரமுகர்கள் நேற்றுக்காலை செல்வா நினைவாலயத்திற்குச் சென்று தமிழ் நாடு [illegible] காங்கிரஸ் இதன் [illegible] வான இளைஞர் காங்கிரஸ் ஆகியவற்றின் சார்பில் மலரஞ்சலி செலுத்தியதன் பின்னர் முக்கிய அரசியல் பிரமுகர்களை யாழ்ப்பாணத்தில் சந்தித்து கலந்துரையாடினர்கள்.

நேற்றுமாலை கொழும்பு புறப்பட்ட ஜனாப் எஸ். எம் ஹிதாயத்துல்லா இன்று, எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கத்தையும், வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ் ஹமீத்தையும் சந்தித்து உரையாடுவார் [illegible] விருப்பார்.

### தொண்டமான் யாழ். வருகிறர்

(யாழ்ப்பாணம்)
கிராமிய அபிவிருத்தித்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் முதல் தடவையாக அடுத்தமாத நடுப்பகுதியில், உத்தியோக பூர்வ விஜய

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் பாவித்த இந்திய ஒ 1200 விற்பனைக்குண்டு. தொடர்பு: கணபதிப்பிள்ளை இராசையா, சிவகாமி அம்மன்கோவில்வீதி, இணுவில். 5633

### தேவை

தமிழ் - ஆங்கில தட்டச்சு எழுதுவினைஞர் ஒரு ஆணும், ஒரு பெண்ணும் தேவை. 25 வயதிற்கு மேற்படாதவரும், நிரந்தர சேவையை நாடுபவர் மட்டும் தகைமை, வயது தட்டச்சு வேகம், சான்றிதழ்களுடன் தபால் மூலம் சொந்தக் கைபெழுத்தில் 10-5-80 க்கு முன் விண்ணப்பிக்கவும். த. சோமசுந்தரம், சட்டத்தரணி, இல: 251, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம். 5649

### வாடகைக்கு

உரும்பராய் சந்திக்கு அண்மையிலுள்ள சகல வசதிகளுடனும் கூடிய தேநீர்க்கடை வாடகைக்கு கொடுக்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும் மு. புண்ணியமூர்த்தி, செம்பன் ஒழுங்கை, உரும்பராய் சந்தி. 5642

### தவறிவிட்டது

30-4-80 பண்ணைப்பாலத்திற்கும் யாழ் தபாற்கந்தோருக்கும் இடையில் சாவிக்கொத்து தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கவும் R. பாலசுப்பிரமணியம், ஈழநாடு காரியாலயம், யாழ்ப்பாணம் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 5652

### யாழ்ப்பாண அக்கடமி

பின்வரும் வகுப்புக்கள் 16-5-80-ல் ஆரம்பமாகின்றன:

1. க. பொ. த. உயர்தர பரீட்சை (பழைய பாடத்திட்டம்) ஏப்பிரல் 1981 மீட்டல் வகுப்புக்கள், பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும்.
2. க. பொ. த. உயர்தர பரீட்சை 1982 புதிய பாடத்திட்டம்

இந்த வகுப்புகளில் சேர விரும்புவோர் பொது விடுதலை நாட்கள் அல்லாத கிழமை நாட்களில் காலை 9-00 மணிக்கும் பகல் 12-00 மணிக்கும் இடையே காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்கள் 7-5-80 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அக்கடமியில் இந்த ஆண்டில் படித்த மாணவர்கள் தொடர்ந்து க. பொ. த. உயர்தர பரீட்சை ஏப்பிரல் 1981-ற்கு படிக்க விரும்பினால் 7-5-80ற்கு முன்னர் அறிவிக்கவேண்டும்.

விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னரே மாணவ, மாணவிகள் தெரிந்து எடுக்கப்படுவர்.

அதிபர்

தொலைபேசி எண்: 617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
5608

# "1983ல் எம்மைத்தான் எதிர்நோக்க வேண்டும்"

## ஐ.தே.க.மீது ரோகண விஜேவீர தாக்கு

(கொழும்பு)

"எமது இயக்கத்தில் உள்ள துரோகிகள் சிலரைக் கைக்குள் போட்டுக்கொண்டு, ஐக்கிய தேசியக்கட்சியினர் எம்மை அழிக்கமுயற்சிக்கின்றனர் நாம் உயிரிழக்க நேரிட்டாலும் எமது இயக்கம் அழிந்துவிடாது. 1983ல் எம்மைத்தான் ஐக்கிய தேசியக்கட்சியினர் எதிர்நோக்கவேண்டும்"

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் திரு. ரோகண விஜயவீர, கொழும்பு நகரமண்டபத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"ஐக்கிய தேசியக்கட்சி பதவிக்கு வந்ததற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், இடதுசாரிகள் என்று கூறிக்கொள்ளும் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சியும்தான் காரணமாக இருந்தன. இக்கட்சிகள் ஆற்றிய தர்பாரின் பலாபலனே இது. இந்த அரசு இப்போது புதிதாக எதையும் செய்துவிடவில்லை. பழைய அரசு எப்படி மக்களை ஏமாற்றியதோ அதுபோலவே இப்போதைய அரசும் ஏமாற்றி வருகிறது.

### அரசியல் அந்தஸ்து மறுக்கிறார்கள்

"ஜனநாயகத்தில் தனக்குப் பற்று இருக்கிறதென்று கூறிக்கொள்ளும் ஜே. ஆர், எமது இயக்கத்திற்கு அரசியல் அந்தஸ்து வழங்க மறுப்பதிலிருந்து தமது ஜனநாயகப்பற்றை வெளிப்படுத்தியிருக்கிறார்.

### பொலிஸ் அதிபர் புகைப்படம் பிடித்தார்

"இன்றுகூட எமது ஊர்வலத்தை இந்த அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பொலிஸ் மா அதிபர், லிபட்டி படமாளிகையின் மேல்மாடியிலிருந்து புகைப்படம் எடுத்தார். இரகசியப் பொலிசார் எமது இயக்க அங்கத்தவர்களைச் சுற்றிச்சுற்றித் திரிகின்றனர். எம்மைப் பார்த்து அவர்கள் பயப்படுகிறார்கள்.

"பொய் சொல்லிப் பதவிக்கு வந்ததால் எம்மைப் பார்த்துப் பயப்படுகிறார்கள். எமது அலுவலகத்தைத் திடீர் திடீரெனச் சோதனையிடுகின்றனர். இதற்குக் காரணம் வேறொன்றுமல்ல. பயம்தான் காரணம் எம்முடன் 85 வீதமான தொழிலாளர்களும், விவசாயிகளும் இருக்கிறார்கள் அதனால் பயப்படுகின்றனர்.

"மூன்று ஆண்டுகளில் இந்த அரசாங்கம் சாதித்தது என்ன? வாழ்க்கைச் செலவு ஏறிவருகிறது. மக்கள் செய்வதறியாது கதிகலங்கி நிற்கிறார்கள் ஜே. ஆனால் இவற்றையெல்லாம் தீர்க்கமுடியுமா? முடியுமெனில் எம்மைக் கண்டு இவர்கள் ஏன் பயப்படவேண்டும்.

"ஏழு ஆண்டுகள் ஆட்சியிலிருந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைச் சிறையில் வைத்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் மீண்டும் பதவிக்கு வந்து எம்மைச் சிறைவைக்கவா முயற்சிக்கிறார்கள். அது முடியாத காரியம். நாம் ஒருபோதும் அதற்கு அனுமதியோம்."

(கு

### தேவை

தமிழ், ஆங்கிலத் தட்டெழுத்தாளர் ஆண் தேவை.

தொடர்பு:

5646 சி. கதிரவேலுப்பிள்ளை, பா. உ.

## பதவி வெற்றிடம்

"மத்திய கிழக்கில் நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுள்ள (CONSTRUCTION WORK) கம்பனியொன்றுக்கு நன்கு அனுபவம் வாய்ந்த

எலெக்றிசன் (Electrician)

பைப்பூட்டுபவர்கள் (Pipe Fitters) தேவை.

4-5-1980 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்குமிடையில் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 111-ம் இலக்கத்தில் புகைப்படம், அனுபவ சேட்டிபிக்கற், பாஸ்போட் ஆகியவற்றுடனும், பிரதிகளுடனும் நேரில் சந்திக்கவும்.

5638 'காதம்பரிஸ்'

Labour Licence No. 270

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

வத்துகாமம் நகர சபைத் திடலில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 777-வது இலக்க சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
27 A 0208
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு
27 E 0643
ரூபா 40 000

மூன்றாவது பரிசு
25 U 0956
ரூபா 10,000

(7-ம் பக்கம் பார்க்க)

## சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி80-

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பஸ் நடத்துநரிடமும் ஒழுக்கம், அவதானம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் ரோட்டறிக் கழகம்

"சிறந்த நடாத்துநர், சிறந்த சாரதி" போட்டியை

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச்சபையுடனும் 'ஈழநாடு' பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது. இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது.

இந்த டிப்போக்களிலிருந்து செயற்படும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடாத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் 'ஈழநாடு' பத்திரிகையில் இம்மாதம் 25 ம் திகதி முதல் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும்படி யாழ் ரோட்டறிக்கழகம் பஸ் பிரயாணிகளை அன்புடன் கோருகிறது.

கீழே தரப்படும் கூப்பனைக் கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:

ரோட்டேறியன் பல்வைத்தியகலாநிதி
பா. சோ. பாரதி
தலைவர் - தொழிற்சேவை பகுதி
பல் வைத்திய நிலையம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### சிறந்த பஸ் நடத்துநர்-சாரதி தெரிவுப் போட்டிக் கூப்பன்

சிறந்த நடத்துநர் பெயர் ................................ சிறந்த சாரதி பெயர் ................................

டிப்போ :- யாழ்ப்பாணம்-காரைநகர்-பருத்தித்துறை-கிளிநொச்சி-முல்லைத்தீவு-மன்னார்-வவுனியா.

(நீங்கள் தெரிவுசெய்யப்பட்டவர் கடமையாற்றும் டிப்போவின் கீழ் கீறிடுக)

பஸ் செல்லும் வழி இலக்கம் (Route No...............)

அனுப்புபவர் பெயர்.............................ஒப்பம்.............

விலாசம்.............................................................

# நடன விருந்து

அகில உலகிலும் குச்சுப்பிடி நடனத்திற்கு புது மெருகூட்டிய
நாட்டிய நடன மேதை
இலங்கையிலும் கச்சேரி நடத்த வருகை தருகின்றார்.
இரு நிகழ்ச்சிகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெறும்.
சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்! கடைசிச் சந்தர்ப்பம்!!
அரிய நடன இசைவிருந்து

**கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில்**
6-05-80 மாலை 6-30 மணிக்கு

**யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்**
11-05-80 மாலை 6-30 மணிக்கு

நாட்டிய நடன மேதை
வேம்பட்டி சின்னசத்தியின் குழுவினர்
குச்சுப்பிடி நடன மேதை

**ரங்கா விவேகானந்தனை**

[illegible] வைக்கின்றனர்.
[illegible] நுழைவுச் சீட்டு மண்டப வாசலில் கிடைக்கும்.

5650

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பணிபின்மை அல்லது தொழிலின்மை ஆறுதல் அன்று பணி மாற்றம் ஆறுதல் அளிக்கிறது மந்தமான மனம் என்றும் துன்புற்றிருக்கிறது அது சைத்தானின் தொழிற்சாலை.

—சுவாமி விவேகானந்தர்

## மக்கள் கருத்து

### சாதி வளர்க்காதீர்

''இந்தியாவைப் போன்று சிறுபான்மைத் தமிழர் தொகைக்கேற்ப பிரதிநிதித்துவம் வழங்குக'' என்ற தலைப்பில் கடந்த 29-4-80 திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தியைக் கண்டு வேதனையடைந்தேன்.

கோப்பாயில் நடைபெற்ற அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் 30 வது வருடாந்த மகாநாட்டின் இது நிறைவேற்றப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. சாதியில்லாச் சமுதாயம் உருவாக்குவதற்கு கடந்த 30 வருடங்களுக்குமேல் அமரர் வன்னியசிங்கம் முதல் இன்றைய அரசியல்வாதிகளாலும், சமூகசீர்திருத்தவாதிகளாலும் எடுக்கப்பட்டுவரும் முயற்சியினால் ஓரளவு குறைந்துபோகும்- அழிந்துபோகும்- சாதியை மீண்டும் நிலைநாட்டி 'சீல்' அடிக்கவேண்டுமென்ற எண்ணம் திருவள்ளுவர் மகாசபைக்கு ஏன் ஏற்பட்டதென்று தெரியவில்லை. சாதியை அழிக்க ஒரு மக்கள் கூட்டம், சாதியை நிலைநாட்டுவதற்கு ஒரு மக்கள் கூட்டம்! தங்கள் சாதியின் பெயரைச் சொல்லி ஒரு பெயர்ப்பலகை மாட்டும் இவ்வேளையில் இவர்களுக்கு ஒரு சாதியில்லாச் சமுதாயம் தேவைதானா? யாரும் இனம் கண்டுபிடித்து சிறுபான்மைத் தமிழன் என்று கூறமுடியாத நிலையில் இருக்கும் மனிதனை இப்படியான சபைகளை அமைத்து இனம் காணக்கூடிய முறையில் பெயர்ப்பலகை மாட்டவேண்டியது அவசியம் தானா?

இந்தியாவைப்போன்று இங்கும் சாதிவெறி முழுமூச்சாய் இயங்க திருவள்ளுவர் இயக்கம் ஆசைப்படுகின்றதா? என்னைப்போல் எத்தனையோ மக்கள் இதைப்பற்றிச் சிந்திப்பதை இந்த வள்ளுவர் மகாசபை அறிந்து தனது தீர்மானத்தை மாற்றிக்கொள்ளட்டும்.

த. தனபாலசிங்கம்
மீசாலை வடக்கு,
மீசாலை

ஃ ஃ ஃ

### பஸ் நடத்துநர்கள் கவனத்திற்கு

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து 23 சிறீ 3568 வாகன இலக்கம்கொண்டதும் 768 பாதை இலக்கம் உடையதும் யாழ்ப்பாண டிப்போவைச் சேர்ந்ததுமான பஸ் வண்டி யாழ். பஸ் நிலையத்திலிருந்து 15-4-80 காலை 6 மணிக்கு தெல்லிப்பழை நோக்கிப் புறப்பட்டது. அதில் நானும் பிரயாணம் செய்தேன் அந்த வண்டியில் துர்க்கை அம்மனைத் தரிசிக்கச் சென்ற பக்தர்களும் காணப்பட்டனர். அதில் வயது முதிர்ந்தவர்களும் காணப்பட்டனர்

மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோவிலடியில் ஒரு வயோதிபர் பஸ்ஸில் ஏறினார். அவருக்குக் காதுகேளாதுபோலும். அவருக்கு 70 வயது இருக்கலாம் அவர் இயந்திரத்துக்கு அருகில் இருந்ததால் நடத்துநர் ரசீது எடுக்கவில்லையா என்று கேட்டது அவருக்குக் கேட்கவில்லை. அதற்கு நடாத்துநர் ''செம்மலி, செவிடன்'' முதலான சொற்களைப் பாவித்துப் பேசினார். வயோதிபரும் ஏசினார். இவர்களினால் அதில் பிரயாணம் செய்த பிரயாணிகள் அசௌகரியத்துக்குள்ளானார்கள்

இவ்விரு அருவருக்கத்தக்க நடவடிக்கைகளை நடத்துநர்கள் கைவிட்டு, பிரயாணிகள் மனிதர்கள் என்ற உணர்வோடு மரியாதை காட்டி நடக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அ. அமிர்தரஞ்சன்
சொட்டடி,
யாழ்ப்பாணம்.

# ஜனநாயக ரீதியில் இயங்கும் ஒரே கட்சி கூட்டணிதான்!

## இலட்சியம் நிறைவேற ஐக்கியம் தேவை''

### -எம். சிவசிதம்பரம்

(யாழ்ப்பாணம்)

''நமது கட்சி சர்வாதிகாரக் கட்சியாக இருந்தால் இளைஞர்களை நம்மை ஒதுக்கலாம். ஜனநாயக ரீதியில் எவ்விடயத்தையும், பேசித்தீர்த்துக் கொள்ளும் ஒரேஒரு இயக்கம் கூட்டணிதான். தம்பிமார் செயற்குழுவில் எடுத்துக் கூறி தீர்க்க வேண்டியவற்றை இங்கு பகிரங்கமாகக்கூறி தம் பிரச்னைகளை பெரிதுபடுத்தியிருக்கத் தேவையில்லை''

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடந்த கூட்டணி மேதினவிழாவில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. யோகேஸ்வரன் தலைமையில் நடந்த இவ்விழாவில் பெண்கள், இளைஞர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

### வவனியாப் பிரச்னை

கூட்டணித் தலைவர் மேலும் கூறியதாவது! ''கட்சிக்குள் உள்ள சிலவிடயங்களை, தம்பிமார் பகிரங்கமாகச் சொல்ல வேண்டியதில்லை. அவற்றைப் பேசித்தீர்த்துக் கொள்ளலாம், எத்தனையோ விஷயங்களை அப்படிப்பேசித் தீர்த்திருக்கிறோம். இது தம்பிமாருக்குத் தெரியாதா? செயற்குழுவில் தம்பிமார் இடம்பெறவில்லையா? வவனியாவில் நடந்த பொதுச் சபைக் கூட்டத்தில் வவனியா பிரச்னை தொடர்பாக பாராளுமன்றம் செல்ல வேண்டும் எனத்தீர்மானித்தபோது தம்பிமார் தங்கள் ஆட்சேபத்தைத் தெரிவித்தனர். தம்பிமாரின் ஆட்சேபத்தை ஏற்று ஜனாதிபதியிடம் உறுதிமொழி பெற்ற பின்னர் செல்வதென தீர்மானிக்கவில்லையா? பிரச்னைகளை செயற்குழுவில் கூறித் தீர்வு காணுங்கள்.

### இயக்கம் என்ன செய்யும்

''அமிரை தலைமைப்பீடத்திலிருந்து அகற்றிவிட்டு இந்த இயக்கம் என்ன செய்யும்? சிந்தித்துப்பாருங்கள். நாம் லட்சியத்தை அடைய ஒற்றுமைப் படுவதே ஒரே ஒரு வழியாகும் கூட்டணிக்குள் பிளவுகள் வளருவதனால் குமார் பொன்னம்பலம் ஒருபக்கத்தில் வட்ட மேசை அல்லது நியாயமான சுதந்திரம் என்று கோஷம் எழுப்புகிறார். மறுபக்கத்தில் அரசாங்க அதிபர் அதிகாரம் செய்கிறார்.

### வாலிபர்கள் சென்றது வேதனையாகும்

''மதுரஓயாவிற்கு இங்கிருந்து 500 வாலிபர்கள் சென்றது வேதனைக்குரியது. இந்த நிலைமையை நீடிக்க விடக்கூடாது எங்கள் அணியில் குழப்பம் ஏற்பட விடாதீர்கள்.

''இளைஞர் பேரவையினரின் கருத்துக்களை இன்று பத்திரிகைகள் கொட்டை எழுத்தில் பிரசுரிக்கின்றன. இளைஞர் பேரவையில் உள்ள அன்பிஞரா, இப்படிச் செய்கின்றன? இல்லவே இல்லை இளைஞர் பேரவையினரின் பேச்சுக்களைபத்திரிகைகளில் பெரிதாக போட்டு தூழப்புகிறார்கள்.

### கருத்து வேறுபாடு உண்டு

''நமக்குள் கருத்து வேற்றுமை இருக்கிறது இதனை பெரிது படுத்துவதற்கு நாட்டில் சில சக்திகள் உண்டு. கூட்டணியைப் பலவீனப் படுத்த வேண்டுமென்பதற்காக பத்திரிகைகள் திட்டமிட்டு சதி செய்கின்றன என்பதை தம்பிமார் மறக்கக் கூடாது கூட்டணியைப்போல் ஜனநாயகரீதியில் இயங்கும், வேறு இயக்கம் இல்லை

### முதலில் அரசியல் சுதந்திரம்

''அரசியல் சுதந்திரம் பெற்றபின்தான் பொருளாதாரச் சுதந்திரம் பெறவேண்டும். அடிமைப்பட்ட மக்கள் முதலில் அரசியல் சுதந்திரம் பெற வேண்டும். தமிழ்த் தொழிலாளர் அரசியல் சுதந்திரம்பெற மற்றநாடுகளைப்போல் பொதுமக்களை ஒரு அணியில் திரட்டவேண்டும். அதுதான் கூட்டணி தொழிலாளர் வர்க்கத்தின் முதல் கடமை இயக்கத்தைப் பலப்படுத்தி சுதந்திர போராட்டத்தில் பங்கு பற்றுவதுதான்.

### வாசுதேவா எங்கிருந்தார்?

''இடதுசாரியினர் சிங்கள, தமிழ் போராட்டம் ஏற்படும் போது சிங்கள மக்கள் பக்கம் சேர்ந்து விடுகின்றனர்கள். தம்பி வாசுதேவா நாங்கள் அரசுடன் ஒத்துழைப்பதாகக் கூறுகிறார். 72ம் ஆண்டு வாசுதேவா எந்தக் கட்சியில் இருந்தார்? புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டபோது வாசுதேவா என்ன செய்தார்? அவருக்கு இப்பதான் புதிய ஞானம்பிறக்கிறது. அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது என்ன செய்வார் என்பதை தமிழ்மக்கள் இனங்கண்டு கொண்டு விட்டார்கள்'' என்றார்.

### யாழ். எம். பி. உரை

யாழ்ப்பாண எம். பி. திரு. வி யோகேஸ்வரன் தலைமையுரையில் கூறியதாவது! ''யு. என். பி. அரசு கொழும்பில் இந்திய பாடகரை வரவழைத்து, மேதினத்தை கோலாகலமாக பெரும் விழாவாகக் கொண்டாடுகிறது. இதுமுதலாளித்துவ வாதிகளுக்கும், தொழிலாளருக்குமுள்ள வேறுபாட்டைஎடுத்துக்காட்டுகிறது தொழிலாளர் பிரச்னைகளை இந்த அரசு தீர்த்துவைக்கவில்லை.

''500 கோடி ரூபாவை பாதுகாப்புக்காக இந்த அரசு செலவிடுகிறது தமிழ்மக்களை அடக்கி ஒடுக்கி, இந்த நாட்டில் அடிமைகளாக வைத்திருப்பதற்கே இதனைச்செய்கிறது. நாங்கள் ஆடம்பரம், அலங்காரங்களை குறைத்துக்கொள்ள வேண்டும். நாம் சிக்கனமாக வாழப் பழகிக்கொள்ளவேண்டும்'' என்றார்.

### தமிழ் இயக்கம் நடத்தினேன்

தமிழ் தொழிற்சங்க கூட்டணித் தலைவர் பண்டிதர் கா... வது ... கால் நூற்றாண்டுக்கு முன் ... பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் மொழிவழித் தொழிற்சங்கங்களை அமைக்கமுற்பட்டார்கள். 56ம் ஆண்டு, கொழும்பு நாவலர் மண்டபத்தில், தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்கள் கூட்டிய முதல் கூட்டத்திற்கு நானே தலைமை வகித்தேன் மொழித்திணைக்களத்தில் 6 ஆண்டுகள் தனித் தமிழ் இயக்கம் நடத்தினேன்

''அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தில் பல தமிழர் இருந்தனர். சிங்களச் சட்டம் வந்ததும் இச்சங்கம் தமிழரை கைவிட்டது இதனால் தமிழ் எழுதுவினைஞர் சங்கம் தோன்றியது.

''சமதர்ம சமுதாயத்தை உருவாக்க தொழிலாளர் உரிமைகளைப்பெற ஒரே ஒரு வழி 'தமிழ் ஈழம்' காண்பது தான் நாம் விடுதலை பெறுமல் தொழிலாளர் போராடினாலும் குறைகளை போக்கமுடியாது.

### தமிழருக்கு பெரும்அநீதி

''தமிழ் ஊழியர்களுக்கு பெரும்அநீதி செய்யப்படுகிறது உத்தியோகம் பெற்று 3 ஆண்டுக்குள் சிங்களம் படிக்கவேண்டுமாம் ஒரு ஆண்டுக்குள் 5ம் தரம் சித்தியடையவேண்டும் சிங்களவர்களுக்கு தமிழ் படிக்க வேண்டும் என்ற நிபந்தனை கிடையாது.

தமிழர்களை எவ்வளவு விரைவில்அரசாங்க சேவையிலிருந்து நீக்கவேண்டுமோ அதற்காகவேசிங்களச்சட்டம் கொண்டு வரப்பட்டது. மற்றது மொழி உரிமையைப் பறிப்பதற்காக இதை தமிழினம் உணரவேண்டும்.

''சுதந்திரக் கட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்டவர்கள், யு. என். பி ஆட்சிக்கு வந்ததும், வேலைபெறுகிறார்கள். யு. என். பி. ஆட்சியில் பாதிக்கப்பட்டவர்கள், சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்ததும் வேலைபெறுகிறார்கள். ஆனால் தமிழருக்கு எந்த அரசும் வேலைகொடுக்க வில்லை.

### பணம் கொடுத்து வேலைபெற்றனர்

''இந்த அரசு 22,136 சிங்கள ஆசிரியர்களை நியமித்துள்ளது ஒரு தொகுதியில் மட்டும் 2000 சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் ஆனால் 20 தமிழ் தொகுதிகளில் 1516 தமிழ் ஆசிரியர்கள் மட்டும் அதுவும் பணம்கொடுத்து வேலைபெற்றிருக்கிறார்கள். ஊழல் பற்றி விசாரணை குழு நியமிக்கசொன்னோம் எல்லாம் ஊழல் மயமாக இருக்கிறது ஊழலை களையவேண்டுமானால் எல்லா அமைச்சர்களையும் வீட்டுக்கு அனுப்பவேண்டும். சுதந்திரக்கட்சி ஆட்சியில் 6 வருடம் நடந்த ஊழலிலும்பார்க்க யு. என். பி. அரசின் 2 வருட ஆட்சியில் ஊழல் அதிகரித்து விட்டது.

### வடபகுதி வங்கிகளில்

''வடபகுதி வங்கிகளில் 25 சிங்கள வாலிபர்கள் காப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் ஆனால் தென்பகுதி வங்கிகளில் தமிழருக்கு இடமில்லை தமிழ்ப்பகுதி வேலைகளையாவது தமிழ் இளைஞருக்குக் கொடுக்கக்கூடாதா'' என்று கூறினார்.

யாழ் மேயர் திரு. இராசா விசுவநாதன் பேசுகையில் கூறியதாவது!

''கூட்டணி நிர்வாகத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் தனித் தமிழில் தான் நடக்கிறது. தமிழ் பேசும் தொழிலாளரின் பிரச்னை வர்க்கப் பிரச்னையல்ல; இனப் பிரச்னையாகும். தமிழினத்தின் ஒரே அணி கூட்டணிதான். அதில் சேர்ந்து போராடுங்கள்'' என்றார்.

### 35 லட்சம் தமிழ் அடிமைகள்

உடுப்பிட்டி எம் பி திரு. கே. இராஜலிங்கம் பேசுகையில் கூறியதாவது!

''1948ம் ஆண்டு சுதந்திரம் இந்நாட்டிற்குக் கிடைத்த நாள்முதல் 35 லட்சம் தமிழ் மக்களும் அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசியல், பொருளாதார சுதந்திரம் கிடைக்க

(6-ம் பக்கம் பார்க்க)

## நாடும் நடப்பும்

மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் வந்த ஒரு பெண் தனக்கு ஏற்பட்டதாகக் கூறிய அனுபவம் பற்றி நான் 1-5-80 வியாழக்கிழமை எழுதியிருந்தேனல்லவா?

இதுபற்றி யார் கவனித்து நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்ற சந்தேகம் எனக்கு ஏற்படாமலிருக்கவில்லை. ஆனாலும் ஊதுகிற சங்கை ஊதிவைப்போம் விடிகிற நேரம் விடியட்டும் என்று எழுதிவைத்தேன்.

இதைப்பற்றி அறிந்துகொண்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய தலைவர் திரு டட்லி குணசேகரா நேற்றுக் காலை என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு தமக்கு ஏற்பட்ட நிலைபற்றிப் புகார் கூறிய பெண்மணி குறிப்பிட்ட பஸ்வண்டியின் இலக்கம் பற்றி ஏதாவது தெரிவித்தாரா என்றும் அவர் வவனியாவில் பெற்ற டிக்கட் வைத்திருக்கிறாரா என்றும் கேட்டார்.

அந்தப் பெண் படிக்காதவர் என்றும் இப்படியான விபரங்களை அவர் சேகரிக்கக் கூடியவரல்லவென்றும் கூறிய நான் சென்றமாதம் 27-ம் தேதி பிற்பகல் இரண்டரை மணிக்கு மன்னாரிலிருந்து புறப்பட்ட பஸ்ஸில் பிரயாணம் செய்ததாகக் கூறிய விபரத்தை எடுத்துக் காட்டினேன்.

அந்தப் பெண் பெரும்பாலும் மன்னாரிலும் வாழ்ந்து வருபவர்.

இதுபற்றிக் கேட்டறிந்த திரு டட்லி குணசேகரா இப்படியான புகார்களை ஆதாரத்துடன் மக்கள் தெரிவித்தால் தாம் உடன் ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். இந்தப் பெண்ணின் புகார் பற்றியும் ஆராய்வதாகக் கூறினார்.

சபாஷ் குணசேகரா!

மட்டக்களப்பு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவையைப் பற்றி இப்போது மக்கள் அதிகம் கவலைப்படுவதாக இல்லை. பஸ்களுக்காகக் கால்கடுக்கக் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை!

மட்டக்களப்புநகர் பஸ்நிலையத்துக்கு மறுபுறத்தில் 'மினி' பஸ்கள் என்று அழைக்கப்படும் 'மோட்டார் வான்'கள் நிற்கின்றன. நல்ல வசதியான 'குஷன் சீற்'றுகள்! உள்ளே இனிய இசையும் காதுக்கு இனிமை தருகிறது. பஸ் கட்டணத்தைவிட இதன் கட்டணம் சிறிது அதிகம்தான் ஆனாலும் கால்கடுக்க கியூவில் நிற்கவோ, வண்டியினுள் நிற்கவோவேண்டியதில்லை ஒவ்வொரு தரிப்பிலும் கடந்து நின்று கணக்காது. பிரயாணிகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுகிறார்கள்.

ஆனால் மாலை ஏழு மணிக்குப் பின் பஸ்கள்தான் தஞ்சம்!

— ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பிரச்னைகள் தீர்க்கப்படுகின்றன

'ஊடுருவி'

● எஸ். ஜெயந்தி, ஸ்ரீசோமாஸ்கந்தா கல்லூரி, புத்தூர்.

பிரச்னை: எனக்கு பதினேழு வயது. இவ்வருடம் ஆகஸ்டில் நடைபெறவிருக்கும் உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவிருக்கின்றேன். எனக்கு தேசிய அடையாள அட்டை பெறுவதில் பிரச்னையாக உள்ளது. கிராம சேவையாளரிடம் விசாரித்தபோது, பதினெட்டு வயதானால் தம்மால் உதவமுடியுமென்று கூறுகிறார். நான் ஆகஸ்ட் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஒரே கவலையாக இருக்கிறது எனது பிரச்னையைத் தீர்க்கமுடியுமா?

தீர்வு: இதுபோல பலர் எமக்கு பிரச்னை எழுப்பியுள்ளனர். ஆகவே, கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரம்) 80 ஏப்ரல் பரீட்சை சம்பந்தமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் கடந்த மாதம் வெளியிட்ட அரச விளம்பர அறிவிப்பை இங்கு அப்படியே தருகின்றோம்:

"எல்லாப் பரீட்சார்த்திகளும் தங்களது ஆள்அடையாளத்தை நிரூபிப்பதற்கு அவசியமான சான்றுகளைப் பரீட்சை மண்டபத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும். ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக ஏற்றுக்கொள்ளும் ஆவணங்கள் வருமாறு: (அ) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை அல்லது (ஆ) செல்லுபடியான பயணக் கடவுச்சீட்டு அல்லது (இ) அஞ்சல் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட, செல்லுபடியாகும் ஆளடையாள அட்டை அல்லது (ஈ) பரீட்சார்த்தி இப்பொழுது கல்வி கற்றுக்கொண்டிருக்கும் கல்லூரி அதிபர், முன்னர் கல்வி கற்ற கல்லூரியின் அதிபர் ஆகியோருள் ஒருவரைக் கொண்டு முறையாக உறுதிப்படுத்தப்பட்டதும் பரீட்சார்த்தியின் சாயலைப் பத்தைக் கொண்டதுமான புகைப்படம்."

● ம. பாஸ்கரநாராயணன் தம்பாலை, அச்சுவேலி

பிரச்னை: 1979 டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் தோற்றியஎனக்கு இதுவரை பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கவில்லை. நான் ஒரு தனிப்பட்ட பரீட்சார்த்தி நான் யாருடன் தொடர்பு கொள்ளவேண்டும்?

தீர்வு: காலம் தாழ்த்தி எழுதியிருக்கின்றீர்கள். பெறுபேறுகள் இதுவரை கிடைக்காதிருந்தால், பரீட்சை சுட்டெண் மற்றும் நீங்கள் பரீட்சைக்குத் தோற்றிய இடத்தின் விபரம், உங்கள் பெயர் விபரம் ஆகியவற்றை உள்ளடக்கிய கடிதத்தை பரீட்சை ஆணையாளர், தரவு நிரைப்படுத்தற் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், கொழும்பு-2 என்ற விலாசத்துக்கு உடன் அனுப்புங்கள்.

● எஸ். சிவநேசன், வயாவிளான்

பிரச்னை: கியூபா தூதரகத்தின் விலாசம் என்ன?

தீர்வு: Embassy of the Rupublic of Cuba, 84, Ward place, Colombo-7.

● சே. கணேசன் புலோலி

பிரச்னை: ஜெர்மன் ஜனநாயக குடியரசின் விலாசம் தருவீர்களா?

தீர்வு: Embassy of the German Democratic Republic, 101, Rosemead place, Colombo-7.

● செ. புஷ்பலீலா, காங்கேசன்துறை

பிரச்னை: (தவிர்க்கப்பட்டது)

தீர்வு: அந்த குழந்தைகளுக்குத் தந்தை என்று அறிந்தும், நீங்கள் தவறுவிட்டது பெரிய குற்றம். ஆனாலும், இதற்காக இனிமேல் மனம்வருந்திப் பயன் இல்லை. வாழ முயற்சியுங்கள்.

● பொ. இராசா, பிரதான வீதி, பண்டத்தரிப்பு

பிரச்னை: கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணக் கிளையில் "அஸ்பெஸ்டர்" ஷீற்றுக்கள் விற்பனைக்கு இருப்பதாக அறிந்து, அங்கு சென்று விசாரித்தபோது விண்ணப்பம் ஒன்று எழுதித்தரும்படி கேட்டார்கள். நேரில் சென்று விண்ணப்பப் பத்திரங்களை நானும் எனது நண்பரும் எழுதிக் கொடுத்தோம். எங்களுக்கு அறிவிப்பதாகச் சொல்லியிருந்தும் இதுவரை எங்களுக்கு ஒருவித அறிவித்தலும் இதுபற்றி கிடைக்கவில்லை. எப்பொழுது விநியோகிக்கப்படும், எப்படி விநியோகிக்கப்படும் என்பதை க. பொ. கூட்டுத்தாபன முகாமையாளருடன் தொடர்புகொண்டு உதவுங்கள்.

தீர்வு: உங்கள் விஷயமாக க. பொ. கூட்டுத்தாபன யாழ் கிளை முகாமையாளருடன் தொடர்புகொண்டோம். அவர் அளித்த விளக்கம் இதோ: "எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கவேண்டும் என்பதற்காக இப்பொழுது புதிய முறையொன்றைக் கையாளுகின்றோம். இங்கு விண்ணப்பப் பத்திரங்கள் உண்டு. தட்டுப்பாடான பொருள்கள் தேவைப்படுவோர் இப் பத்திரத்தை நிரப்பி எம்மிடம் கையளிக்க வேண்டும். இது பின்னர், இங்குள்ள பதிவுப்புத்தகத்தில் வரிசைக் கிரமப்படி பதிவு செய்யப்படும். (குறிப்பாக தூர இடங்களிலிருந்து வருபவர்களுக்கு நாம் ஓரளவு முன்னுரிமை வழங்குகின்றோம்) குறிப்பிட்ட பொருள்கள் எமக்கு கிடைத்ததும் விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கின்றோம். அவர்கள் இங்கு வந்து பெற்றுக்கொள்ளலாம், எப்படியும் விண்ணப்பித்தவர்களுக்கு நிச்சயம் பொருள்கள் கிடைக்கும். அப் பொருள்கள் இங்கு வந்து சேரும் விதத்தில் விநியோகம் முறைப்படி நடக்கும். எந்தவித நிர்வாகச் சீர்கேடுகளுக்கும் இங்கு இடமில்லை" என்று முகாமையாளர் பதிலளிக்கின்றார். சிலநாட்கள் பொறுத்திருந்து பாருங்கள்

'எங்கள் பிரச்னை'
C/o 'ஈழநாடு'
த. பெ. எண்: 49,
யாழ்ப்பாணம்.

# "சமூக அநீதிகளை அறவழி கருத்துக்கள் மூலம் நீக்கலாம்"

(யாழ்ப்பாணம்)

"மக்கள் மத்தியில் புதிய எண்ணங்களையும், சிந்தனைகளையும் ஊட்டுதல் மூலம் அவர்கள் மத்தியில் நிலவுகின்ற சமுதாயப் பிரச்னைகளுக்கு மனமாற்றத்தின் அடிப்படையில் தீர்வுகண்டு கொள்வது, இன்று வளர்ந்து வருகின்ற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுகிறது. சமுதாயத்தில் அறவழிக் கருத்துக்களையும், பலத்தையும் நன்கு பரப்ப வழிவகைகள் செய்யப்படவேண்டும்."

அறவழிப் போராட்டக்குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்ட இரண்டு நாள் பயிற்சிமுகாமின்போது ஆய்வாளராகப் பங்குகொண்ட அமெரிக்க வாழ்வு நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் டாக்டர் திருமதி ஜோனு பேஸி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கைதடி நுணாவில் குமாரகுருபரன் சனசமூகநிலைய மண்டபத்தில் நடைபெற்ற இப் பயிற்சிமுகாமை நிலையத் தலைவர் திரு. க. சி. சண்முகலிங்கமும், டாக்டர் ஜோனு பேஸி குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தனர்.

வடபகுதியிலுள்ள பல்வேறு கிராமப்புறங்களிலுமிருந்து 30க்கும் அதிகமான பயிற்சியாளர்கள் பங்குகொண்டனர்.

அறவழிப் போராட்டக் குழுவினால் நடாத்தப்பட்ட பத்தாவது பயிற்சி முகாமான மேற்படி வைபவத்தில் அமெரிக்க வாழ்வு நிலையத்தைச் சேர்ந்த செல்வி டேகிமோபி, திருவாளர்கள் ஜாக்மோபி, ஜோன், பீற்றர் ஆகியோர் பங்கு கொண்டு பயிற்சியாளர்களுக்குப் பல புதிய நற்சிந்தனைகளை கருத்துரைகள் மூலமும், பாத்திரப் படைப்பு எனும் நிகழ்ச்சி மூலமும் வழங்கினர்.

தமிழ்பேசும் மக்களிடையே ஆண்டாண்டு காலமாகப்புரையோடிப்போயிருக்கும் சமூக அநீதிகளான சாதி, சீதனம் என்பவற்றினை அறவழிக்கருத்துக்கள் மூலம் எவ்வண்ணம் தீர்த்துக்கொள்ளலாம் என்பது பற்றிஅமெரிக்க ஆய்வாளர்கள் தெரிவித்தனர்

வியாழக்கிழமை காலை பயிற்சி முகாமை அடுத்துள்ள பகுதியில் பயிற்சியாளர்களுடன் அமெரிக்க ஆய்வாளர்களும் சேர்ந்து சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். இக் கிராம மக்களும் இந் நிகழ்ச்சியில் பங்களிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். (செ)

## தென்மராட்சி நிறுவனத்தின் லண்டன் கிளை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியினதும், வடபகுதியினதும் அபிவிருத்தியில் கூடிய அக்கறைகாட்டிச் செயல்படவென அண்மையில் சாவகச்சேரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட தென்மராட்சி நிறுவனத்தின் லண்டன் கிளை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்தின் போது லண்டன் மாநகரில் வசிக்கும் நூற்றுக்கணக்கான தென்மராட்சியைப் பிறப்பிடமாகக்கொண்ட வாலிபர்களும் யுவதிகளும் பங்கு கொண்டிருந்தனர்.

தென்மராட்சி நிறுவனத்தின் எதிர்கால வளர்ச்சிக்கும் விஸ்தரிக்கப்பட்ட செயல்பாட்டுக்கும் சகல உதவிகளையும் வழங்க லண்டன் வாழ் தென்மராட்சிமக்கள் திரு. வி என் நவரத்தினத்திடம் இக்கூட்டத்தில் உறுதியளித்தனர் (செ)

## "சிறுபான்மையினர் பிரச்னைகளை

# வர்க்கப்போராட்டம் மூலமே தீர்க்கமுடியும்"

(அரியாலை)

"தமிழ் இளைஞர்கள் தமது தலைமையை எதிர்த்துப் போராடத் தொடங்கியுள்ளனர். தமிழ்த் தலைவர்கள் கடந்த முப்பது வருடங்களாகக் கைக்கொண்ட வங்குரோத்துக் கொள்கைகளைக் கைவிட்டு மார்க்ஸிஸ- லெனினிஸ கொள்கைகளை முன்வைத்துப் போராடவும் சோவியத் ஏகாதிபத்தியத்துக் கெதிராக போராடவும் தமிழ் இளைஞர்கள் முன்வரவேண்டும்."

இவ்வாறு, யாழ் நிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சி (சீனசார்பு) மேதினக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய திரு. சே. க. சுப்பிரமணியம்குறிப்பிட்டார்.

திரு. சுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: தார்மீக ஆட்சியில் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்போர் தமது சொகுசான வாழ்க்கைக்கு ஜீப்பையும், வீடு வசதிகளையும் பெற்றதுடன், தமது சம்பளத்தையும் அதிகரித்துப் பெற்று வருகின்றனர். ஆனால் பாட்டாளி மக்களின் வாழ்க்கைச் செலவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வந்த பொழுதிலும் அதனைப்பற்றி எதுவுமே பேசாமல்மௌனமாக இருக்கின்றார்கள். ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் தமிழ்த் தொழிலாளர்களையும்-சிங்களத் தொழிலாளர்களையும் தனித்தனியாகப் பிரித்து வைத்திருப்பதுடன் அவர்கள் ஒன்றுபட்டு மாபெரும் போராட்டத்தை அரசாங்கத்துக்கெதிராக நடாத்தவும் முடியாத அளவுக்கு நிலைமையை உண்டாக்கி வருகின்றனர். எமது இயக்கம் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வருகிறது என்று கூறினார்.

நவலங்கா தொழிற்சங்கப் பிரதிநிதி திரு. கா பஞ்சலிங்கம் பேசுகையில் கூறியதாவது: "தமிழ்ப் பகுதியில் வாழும் தொழிலாளர்கள் பிழையான பாதைக்கு இழுத்துச் செல்லப்படுவதுடன்பாராமன்ற தமிழ்த்தலைவர்கள் தமது சொத்துக்களை காப்பாற்றி வருகின்றனர். தலைவர்களை எதிர்க்கிறோமே தவிர தொழிலாளி வர்க்கத்தை நாம் எதிர்க்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் கடந்த வருடம் நடைபெற்ற மேதின விழாவில் அடுத்த மேதினம் தமிழ்ஈழத்தில் தான் நடைபெறும் என்று கூறினார். இன்று நடப்பது என்ன? தமிழ்பேசும் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியில் தான் ஐக்கியப்பட வேண்டுமென்று கூறும் யாழ் மாநகர முதல்வர் மாநகராட்சி மன்றத்தில் பணிபுரியும் ஊழியர்களின் உரிமைகளை மறுக்கக் காரணம் என்ன என்று தெரியவில்லை. என்று கூறினார்.

### வர்க்கப் போராட்டம்

தொழிலாளர் மக்கள் கட்சிப் பிரதிநிதி திரு. [illegible] பேசுகையில்: "இந்த நாட்டில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சிறுபான்மையினரின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியாது. சிறுபான்மையினரின் பிரச்னை உட்பட சகல பிரச்னைகளையும் வர்க்கப் போராட்டத்தின் மூலம்தான் தீர்க்க முடியும் என்று எமது கட்சிகருதுகிறது. அன்று தொழிலாளர்களின் பிரச்னைகளைத் தீர்க்க செங்கொடியைத் தூக்கியவர்கள் எமது இயக்கங்களைச் சிதைத்தார்கள். அவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராகவும் நாம் போராட வேண்டும். மாவோவையும், அவரது கொள்கைகளையும் தூக்கிப் பேசியபலர் இன்று தொழிலாளர்களை மறந்து விட்டதுடன் அவர்களைக் காட்டிக் கொடுத்து தம்மைக் காப்பாற்ற முனைந்துள்ளனர். சிங்கள மக்களை ஏமாற்றி ஏகாதிபத்திய ஆட்சியை நடத்தும் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா தார்மீகம் என்ற போர்வையில் ஆட்சி செய்துவருகிறார்.

தமிழ்மக்களும் - சிங்கள மக்களும் ஒன்றிணைந்து அரசுக்கு எதிராகப் போராட்டம் நடாத்த வேண்டும் இப்போராட்டத்தை நடத்த மார்க்ஸிஸ, லெனினிஸ சித்தாந்தம்தான் சிறந்த மார்க்கம் ஆகும். எம்மிடையே இருக்கும் சிறு கருத்துவேறுபாடுகளை நீக்கி நாம் ஒன்றுபட வேண்டும்" என்று கூறினார்.

திரு. கே. செந்திவேல் பேசுகையில், "தென்னிலங்கையில் தார்மீகம் என்று சொல்லி ஜே. ஆரும், அவரது கட்சியினரும் பதவிகளைப் பெற்றனர். அதைப் போல் வடபகுதியில் தமிழ் ஈழம் என்று சொல்லி கூட்டணியினர் வெற்றிபெற்றனர். தார்மீகத்தின் மூலம் தொழிற்சங்க உரிமைகளையும், தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்யும் உரிமையையும் ஐக்கிய தேசியக் கட்சி பறித்துள்ளது. தார்மீகத்துக்குப் பின்னால் பயங்கரவாதம் தலைமறைவாக இருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் நடாத்த சந்தர்ப்பம் இல்லையென்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கூறுகின்றனர். பொதுமக்களின் பாவனைப் பொருள்களான சீனி, மா, பாண் என்பவற்றின் விலை அதிகரிக்கப்பட்டபொழுது அதற்கெதிராக இவர்கள் போராட்டங்களை நடத்தவில்லை. ஐக்கிய தேசியக்கட்சி எப்பொழுது ஆட்சிக்கு வந்தாலும் இந்நாட்டில் வாழும் இனங்களுக்கிடையே பிரிவுகளை ஏற்படுத்துவதுடன், பிரதேச ரீதியிலும் பிரிவினைகளை ஏற்படுத்தி தனது ஆட்சியை [illegible] நடாத்தி வருகிறது. தமிழ் விவசாய தொழிலாள மக்களிடையே யாழ்ப்பாணத்தார், பட்டக்களப்பார், மலையகத்தார் என்ற பிரிவினைகளை ஏற்படுத்தி தனது ஆட்சியை சுலபமாக நடாத்த அரசாங்கம் முனைகிறது. இதற்குச் சார்பாக தமிழ்த்தலைவர்களும் செயல்பட்டுவருகிறார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் அபேட்சகர்கள் எல்லோரையும் ஏகோபித்து பாராளுமன்றம் அனுப்பினால் தமிழ்ஈழம் பெற்றுவிடலாம் என்று அன்று கூறினார்கள் பாராளுமன்றத்துக்குச் சென்று மூன்று வரு

(5 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ 83-ல் நிச்சயம் பொதுத்தேர்தல்

# எதிர்க்கட்சிக்கு வந்தாலும் சிறப்பாகப் பணிபுரிவோம்''

## ஜனாதிபதி ஜே. ஆர். காலிமுகத்திடலில் அறிவிப்பு

(கொழும்பு)

''தேர்தல்களைப்பற்றி மக்கள் கவலைப்படவே தேவையில்லை. 83ல் தேர்தல் நிச்சயம் நடக்கத்தான் போகிறது. அப்போதுமக்கள் தாம் விரும்பிய கட்சியைத் தெரிவு செய்ய பூரண சுதந்திரமுண்டு. அப்போது மக்கள் எம்மைப் புறக்கணித்தாலும் எதிர்க்கட்சியில் சேர்ந்து சகல பணிகளையும் சிறப்பாகச் செய்வோம்.''

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன காலிமுகத்திடலில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''அடுத்த பொதுத் தேர்தலிலும் மக்கள் எம்மையே தெரிவு செய்வார்கள் என்று நாம் பூரணமான நம்பிக்கை கொண்டுள்ளோம். 83லும் நாமே பதவிக்கு வருவோம் என்று இத்தினத்தில் உறுதியாகக் கூறிவைக்க விரும்புகிறோம்.

''இன்றைய மேதினத்தைக் கொண்டாடுவதற்கு எமது கட்சிக்கு சுதந்திரக் கட்சியைப் போன்று முதலாளிகளுடையதோ, சமசமாஜிகளினதோ ஆதரவோ உதவிகளோ கிடைக்கவில்லை. தொழிலாளர்களும் விவசாயிகளும்தான் உதவியிருக்கிறார்கள்.

### 10 லட்சம் தொழிலாளர் எம்முடன்

''எம்முடன் ஒன்றாகவே இயங்கி வரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களையும் சேர்த்தால் 10 லட்சம் தொழிலாளர்கள் எம்முடன் இருக்கிறார்கள். இதுவரை பதவி வகித்து வந்த எந்த அரசுக்கும் இவ்வாறான ஆதரவு கிடைக்கவில்லை என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

### முதலாளிகளை பாதுகாக்கவில்லை

''எமது அரசு முதலாளிகளைப் பாதுகாக்கும் கொள்கைகளைக் கடைப்பிடிக்கவில்லை. ஜனநாயக சோஷலிச கிராசென்னையே நிறுவியிருக்கிறோம். தேர்தலில் வாக்குறுதியளித்தது போன்று உள்ளூராட்சித் தேர்தலை நடத்தினோம். பத்திரிகைச் சுதந்திரம் பேச்சுச் சுதந்திரம் என்பவற்றையும் வழங்கியிருக்கிறோம்.

''நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் பணியில் தனியார் துறையினருக்கும் சந்தர்ப்பம் கொடுப்பது நல்லதென்று கருதியதால் அரசாங்க தனியார் துறையினரிடையே சுமுகமான வர்த்தகப் போட்டியொன்றை ஏற்படுத்த விரும்பினோம்.

''நாம் பதவிக்கு வந்த போது பாணின் விலை ஒரு ரூபாவாக இருந்தது. ஆனால் இப்போது 1 ரூபா வுக்கும் உயர்த்தினோம். நாம் பழைய விலையிலேயே விற்றால் வருடமொன்றுக்கு 200 கோடி ரூபா நஷ்டம் ஏற்படும். மக்கள் இன்று உணவு, உடை, தொழில் வசதி, நியாயமான சம்பளம் என்பவற்றையே எதிர்பார்க்கிறார்கள். நாமும் சதவைப்படும்போதெல்லாம் சம்பள உயர்வும் வழங்கி வருகிறோம். அபிவிருத்தி ஏற்படும் போது வேலையில்லாத் திண்டாட்டமும் சாதுகவே குறைந்துவிடும்'' என்று ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார். (கு)

# மரக்கரி அடுப்பு விரைவில் வடக்கிற்கு அறிமுகமாகும்

(யாழ்ப்பாணம்)

எரிபொருள் விலையேற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வட பகுதிப் பாவனையாளர்களுக்கு, மரக் கூட்டுத்தாபனத்தினர் விரைவில் மரக்கரி அடுப்புகளை அறிமுகம் செய்யவிருக்கின்றனர்.

தற்பொழுது கொழும்பு மற்றும் பல பகுதிகளில், இந்த மரக்கரி அடுப்பு பாவனைக்கு வந்துள்ளது.

குறைந்த விலையிலான இந்த அடுப்பு கூடிய வெப்பத்தைக் கொடுக்கிறது.

இந்த அடுப்பு கொழும்பில் 15 ரூபா விதம் விற்கப்படுகிறது. வட பகுதியில் இந்த அடுப்புகளை அறிமுகம் செய்வதற்கான ஏற்பாடுகளை மரக் கூட்டுத்தாபன வட பிராந்தியக் கிளையினர் செய்துவருகின்றனர். (க-அ)

# மே 19 முதல் 24 வரை இளைஞர் வாரம்

## வடபிராந்திய இளைஞர்சேவை மன்றம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இளைஞர் சேவை மன்றம் இம் மாதம் நடுப்பகுதியில் இளைஞர்வாரம் கொண்டாடவிருக்கிறது. இத்தகவல் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

பத்திரிகையாளர் மாநாடு யாழ் தேசிய இளைஞர்சேவை மன்ற மகாநாட்டு மண்டபத்தில் வடபிராந்திய தேசிய இளைஞர்சேவை மன்ற உதவி இயக்குநர் திரு. என். நடராசா தலைமையில் நடைபெற்றது.

இம் மாநாட்டில் தலைமைக் காரியாலயத்திலிருந்து வருகை தந்த தேசிய இளைஞர்சேவை மன்றதலைவர் வெளியீட்டு உதவி இயக்குநர் திரு. குயின்ரன் பெர்னாண்டோ, இளைஞர் வார உதவி இயக்குநர் திரு. கே. எச். அமரதாசா, விவசாயப்பகுதி உதவி இயக்குநர் திரு ஏ. நாகேந்திரன், யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்ற அதிகாரி திரு. கே. தில்லைநாதன் ஆகியோர் பங்குபற்றினர்.

சரவதேச கலப்பற்ற முறையிம் உத்தேச இளைஞர் வாரத்தைக் கொண்டாடுவதென்றும், மே மாதம் 19ந் திகதி தொடக்கம் 24-ந் திகதி வரை இளைஞர் வாரம் கொண்டாடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் தலைமையில் முதலாம்நாள் நிகழ்ச்சிகளும் இளைஞர் விவகார அமைச்சர் திரு. ரனில் விக்கிரமசிங்கா தலைமையில் இறுதிநாள் நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

இளைஞர் வாரத்தில் பொருட்காட்சி, சிரமதானம், பந்தாட்டப்போட்டி, கராட்டி, ஜூடோ, மல்யுத்தம், நாச்சி முதலான போட்டிகளும், கலை, கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

17 வயதுக்கும் 27 வயதுக்குட்பட்ட ஆண்களும் பெண்களும் மட்டுமே இவற்றில் பங்குபற்றமுடியுமெனத் தெரிவிக்கப்பட்டது. (கொ-அ)

''அபிவிருத்தி என்ற போர்வையில்

# வெளியாரிடம் நாட்டை அடகுவைத்து விட்டனர்''

## சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ கவலை

(கொழும்பு)

''அபிவிருத்தி என்ற போர்வையில் இந்தநாட்டை அரசாங்கம் வெளிநாடுகளிடம் அடகு வைத்துவிட்டது''

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியும், அத்தனகல எம்.பியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றம் சாட்டினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி என்பன கூட்டாக நடாத்திய மேதினக் கூட்டத்தில் திருமதி பண்டாரநாயக்கா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''ஐக்கிய தேசியக் கட்சியினர் இம்முறை ஊர்வலம் எதையும் நடத்தவில்லை நடத்தவும் அவர்களால் முடியாது. பதிலாக காலிமுகத் திடலில் பாட்டுக்கச்சேரி ஒன்று நடத்துகிறார்கள் தேர்தல் வாக்குறுதிகளை மறந்த சொன்னதை செய்யாமல் ஆட்சி நடத்துகிறார்கள்.

''உலகச் சந்தை விலைபற்றி நாம் அன்று கூறியபோது புறக்கோட்டையிலுள்ள சந்தைதான் உலகசந்தை என்று கூறியவர் திரு. பிரேமதாசா. ஆனால் அவர்கள் இன்று விஷம் போல் ஏறிவிட்ட விலைவாசி ஏற்றத்திற்கு உலக சந்தையே காரணம் என்று கூறுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

### 3 கோடியை எதிர்த்தவர்கள் 300 கோடி செலவு

''திரு. பிரேமதாசாவினால் அமைக்கப்பட்டுள்ள இரவுச் சந்தை இருக்குமிடத்தில் மூன்றுகோடி ரூபா செலவில் பாராளுமன்றக் கட்டிடம் ஒன்றை அமைக்க நாம் முடிவு செய்தபோது அப்போது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த திரு. ஜே. ஆர். அதனை எதிர்த்தபோதும் நாம் அப்போதிருந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு 3 கோடி ரூபாவைச் செலவு செய்வது உசிதமல்ல என்று முடிவுசெய்தோம். ஆனால் இன்றோ 300 கோடி ரூபா செலவில் ஜெயவர்த்தனபுரத்தில் கட்டிடம் கட்டுகின்றனர் தமது பேரை பதிப்பதற்காகவே இவ்வாறு கட்டி வருகிறார்கள்.

''அபிவிருத்தி என்ற பெயரில் மக்களின் கூப்பன் புத்தகத்தையும் பறித்துவிட்டவர்கள் கண்ணை மூடிக்கொண்டு உலக நாடுகளிடம் கடன் பெற்று வருகிறார்கள்.

''மகாவலியை அபிவிருத்தி செய்கிறார்களா அல்லது தனிப்பட்ட சிலர் அபிவிருத்தியடைகிறார்களா என்பதுதான் சந்தேகமாகவுள்ளது எமது காலத்தில் தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்கள் கூட சிலரின் தனிப்பட்டவையாக மாறியுள்ளன''

'எமது ஆட்சியின் போது வேலை பெற்றவர்கள் பலர் இன்று ரோட்டில் நிற்கிறார்கள். நாம் ஆட்சிக்கு வந்ததும் அவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்துவதுடன் நஷ்டஈடும் வழங்குவோம்'' (கு)

# ''சுருட்டுத் தொழிலுக்கு கூட்டுத்தாபனம் வேண்டும்''

## பிரச்னைகளைத்தீர்க்க இதுவேவழி என்கிறார் முதலியார்

(யாழ்ப்பாணம்)

''கடந்த நூறு வருடங்களுக்கு மேலாகச் சுருட்டுத் தொழிலாளர்கள் முதலாளிகளின் அடிமைகளாகவும், சுரண்டப்படுபவர்களாகவும் வாழ்ந்துவருகிறார்கள். சுருட்டுத் தொழிலாளர்களுக்கு எனத் தனியான ஒரு கூட்டுத்தாபனத்தின் கீழ் கொண்டு வந்தால்தான் அவர்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட முடியும்.''

இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் 16 வது மேதினக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய மேற்படி சங்கத் தலைவர் திரு. மா. க. முதலியார் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி மேதினக் கூட்டம் தாவடியிலுள்ள சங்கப்பணிமனையில் நடைபெற்றது திரு. முதலியார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''சுருட்டுத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு அரசு உத்தேசித்துள்ளது. காலதாமதமின்றி இத்தொழிலை ஒரு கூட்டுத்தாபனத்தின் கீழ் கொண்டுவந்தால்தான் தொழிலாளரின் சரி கூலியும் சேமலாபநிதியும் கிடைக்கும். சிலல் தொழிலாளருக்கு ஒரு கூட்டுத்தாபனம் உருவானதால் அவர்கள் வாழ்வு மலர்ந்துள்ளது. இன்று இலங்கை வாழ் 12,000 சுருட்டுத் தொழிலாளர்கள், வாழ்வு குன்றிய நிலையில் உள்ளனர்.''

தனதிகாரி திரு. க. விசுவலிங்கம் பேசுகையில், தொழிலாளர்கள் கஷ்டநிலை காரணமாக முதலாளி கொடுக்கும் கூலியை வாங்கிச்செல்லவேண்டியிருக்கிறதென்றும், தொழில் உத்தியோகத்தர்கள் தொழிற்சாலைக்கு வரும்போது தாம் எத்தனை வருடங்களாக அத்தொழிற்சாலையில் வேலை செய்கிறார் என்பதை உண்மையாகச் சொல்லவேண்டுமென்றும், ரூசாவிளானில் ஒரு தொழிற்சாலையில் 40 பேர் 15 வருடமாக வேலை செய்கிறார்களென்றும் ஆனால் தொழில் அதிபர் சேமலாபநிதிக்குப் பதியக் கேட்டபொழுது தாம் இரண்டு வாரமாகத் தொழில் செய்வதாகக் கூறியிருந்தார்கள் என்றும், எனவே தொழில் அதிகாரிகள் வரும்போது தொழிலாளர்கள் தமது சரியான வயது, வேலைக்குச் சேர்ந்த திகதி, தாம் பெறும் சம்பளம் முதலியவற்றைக் கூறவேண்டுமென்றும் தெரிவித்தார்

காரியதரிசி திரு. க. தங்கராசா பேசுகையில், சுருட்டுத் தொழிலாளர்கள் ஒற்றுமையாக இருந்தால் எந்த ஒரு முதலாளியும் தொழிலாளரை ஒன்றும் செய்யமுடியாது என்றார்.

உதவிச் செயலாளர் மற்றும் திருவாளர்கள் சி. இராசேந்திரம், அ. விவேகானந்தராசா, சி. பரமானந்தம், இ. யோகநாதன் ஆகியோரும் பேசினர். (கொ-இ)

# குறைந்த விலையில் தேக்கமரம்

(யாழ்ப்பாணம்)

மரக்கூட்டுத்தாபன யாழ்ப்பாண டிப்போவில் பழைய தேக்கமரங்கள் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படவுள்ளது.

வழக்கமான விலையிலும் பார்க்க 30வீதம் குறைந்த விலைக்குப் பெர்மிட் எதுவுமின்றி இந்த மரம் வழங்கப்பட்டுள்ளதாம். (க-அ)

# பெண்கள் பாடசாலை இருமாடிக் கட்டிடம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலையின் புதிய இருமாடிக் கட்டிடம் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரையினால் இம்மாதம் 20ம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது

ஒன்றரை லட்ச ரூபாய் செலவில் அமைந்துள்ள மேற்படி கட்டிடத்திற்கான பணஒதுக்கீடு, அமைச்சரினால் வன்முகப்படுத்தப்பட்ட பரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சிறுபான்மை''

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

டிகளாகிவிட்டனரோ? தமிழ் ஈழம் கிடைத்துவிட்டதா? தமிழ் ஈழப் பிரச்னை அடுத்த தேர்தலை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது'' என்று கூறினார்.

வேறு பலரும் உரையாற்றினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டன் தூதரக முற்றுகை

# துப்பாக்கி இளைஞரின் காலக்கெடு அசம்பாவிதமின்றி முடிந்தது!

லண்டன், மே 2

லண்டனிலுள்ள ஈரானிய தூதரகத்தைக் கைப்பற்றி அங்கிருந்த அதிகாரிகளைப் பணயம் வைத்திருக்கும் ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் இரண்டு தடவைகள் விதித்திருந்த காலக்கெடு எந்தவித அசம்பாவிதமுமின்றி முடிந்தது.

தமது கோரிக்கைகளை ஈரான் அரசு ஏற்றுக்கொள்ள இன்றுவரை காலக்கெடு விதித்திருந்த இளைஞர்கள் அதற்கிடையில் தமது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் பணயக்கைதிகளை கொலைசெய்வதுடன் தூதரகக் கட்டிடத்தையும் வெடிவைத்துத் தகர்க்கப்போவதாக அறிவித்தனர்.

இதனையடுத்து தூதரகக் கட்டிடத்தைச் சுற்றி பிரிட்டிஷ் பொலிசார் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்திருந்ததுடன் பணயம் வைத்துள்ள இளைஞர்களுடன் பேச்சுவார்த்தையும் நடாத்தினார்கள். இப் பேச்சுவார்த்தையின் பின்னர் பணயக் கைதிகளின் செய்தியொன்று ஈரானுக்கு அனுப்பப்பட்டது. [கு]

# புதியபஸ்நிலையம்

(மன்னார்)

மன்னாரிலிருந்து 2 மைல் தொலைவிலுள்ள வலயகாடு என்னும் இடத்தில் 20 லட்சம் ரூபா செலவில் புதிய இ. போ. ச. அலுவலகம் ஒன்று சகல வசதிகளுடனும் அமைக்கப்படவிருக்கிறது. [கு]

# “கோரிக்கைகளை ஏற்பதிலும் ஈரானியர் இறப்பதேமேல்”

## ஜனாதிபதி பாணிசதார் கருத்து

தெஹ்ரான், மே 2

“தூதரகத்தைக் கைப்பற்றியுள்ள ஆயுதம்தரித்த இளைஞர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதிலும் பார்க்க பணயக் கைதிகள் இறப்பதே மேல்”.

இவ்வாறு ஈரானிய ஜனாதிபதி ஜனப் பாணிசதார் தெரிவித்துள்ளார்.

ஈரானியர்களைப் பணயம் வைத்திருப்பவர்கள் மனிதாபிமானமற்றமுறையில் நடந்துகொண்டால் அதனை ஈரானிய அரசு பார்த்துக்கொண்டிருக்காது என்று கூறிய ஜனப் பாணிசதார் எந்தமிரட்டலுக்கும் ஈரானிய அரசு அடிபணியாது என்று கூறினார்.

இதேவேளையில் லண்டனிலுள்ள பணயக்கைதிகளில் ஒருவர் இரகசியசெய்தியொன்றை அனுப்பியுள்ளதாக வெளிநாட்டமைச்சின் அதிகாரி ஒருவர் கூறினார்.

பணயக்கைதிகளில் ஒருவரினதும் சார்பில் தூதரகச்செயலாளர் திரு. ஷா நாஷிசாதே இச் செய்தியை அனுப்பியதாகவும் பணயம்வைத்திருக்கும் இளைஞர்களின் அனுமதியுடனேயே இச்செய்தி அனுப்பப்பட்டதாகவும் கூறினார். (கு)

## தூதுவர்கள் பகிஷ்கரிப்பு

மாஸ்கோ, மே 2

மாஸ்கோவில் நேற்று நடைபெற்ற மேதினக்கொண்டாட்டங்களை 16 தூதுவர்கள் பகிஷ்கரிப்புச் செய்தனர்.

ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடர்பாகவே இவ்வாறு பகிஷ்கரிப்பதாக தூதுவர்கள் அறிவித்துள்ளனர். மாஸ்கோவில் நடைபெற்ற மேதினக் கொண்டாட்டங்களை இவ்வாறு தூதுவர்கள் பகிஷ்கரித்தமை இதுவே முதல் தடவையாகும். (கு)

## நடிகை ஷோபாவின் சடலம்

சென்னை, மே 2

மர்மமானமுறையில் மரணமான பிரபல நடிகை ஷோபாவின் சடலம் மருத்துவபரிசோதனைக்காக மத்திய பரிசோதனைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவரது மரணம் தொடர்பாக உறுதியாக எதையும் சொல்லமுடியாதிருப்பதாகத் தெரிவித்த பொலிஸ் அதிகாரிகள் இவ்விவகாரம் தொடர்பாக யாரையும் தாம் இதுவரை கைதுசெய்யவில்லை என்று தெரிவித்தனர் (கு)

## ஷியா சினு விஜயம்

இஸ்லாமாபாத், மே 2

ஆப்கானிஸ்தான் நிலைமை தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் சீனாவுக்குப் பயணமானார். (கு)

## மட்பாண்ட நிலையம்

(மட்டக்களப்பு)

பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு செல்லையா இராசதுரையினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் 65 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பன்குடாவெளி மட்பாண்ட பயிற்சி நிலையத்தை, இம்மாதம் 10ம் திகதி அமைச்சர் இராசதுரை திறந்துவைப்பார்

மேற்படி பயிற்சி நிலையத்திற்கான அத்திவாரக்கல் கடந்த ஜூலை மாதம் மட்டக்களப்பு அபிவிருத்திமன்ற கொழும்பு மாவட்ட அமைச்சர் திரு எம் மகிமராச்சியினால் நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சதாத் எத்தனை தடவையும் ஜனாதிபதியாக இருக்கலாம்

## எகிப்திய அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம்

ஜெருஸலம், மே 2

எகிப்திய அதிபர் திரு. அன்வர் சதாத் எத்தனை தடவையும் ஜனாதிபதியாக பதவி வகிக்ககூடியவகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றம்செய்யப்பட்டுள்ளது.

அதேத்தடுந்து இரண்டு தடவைகளுக்கு மேல் ஒருவர் பதவிவகிக்கமுடியாது என்று திருத்த சட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டு நேற்றுக் கூடிய மக்கள்சபையில் அது அங்கீகரிக்கப்பட்டுள்ளது

இப் புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் தற்போதைய ஜனாதிபதி ஜனப் சதாத் எத்தனை தடவையும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு பதவிவகிக்கலாம். (கு)

# மணிப்பூரில் கலவரங்கள்; ஊரடங்கு நீடிப்பு!

இம்பால், மே 2

வெளிநாட்டவர் வேலை செய்வதை ஆட்சேபித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடாத்திவரும் மற்றொரு வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் பரவலானமுறையில் பல கலவரங்கள் நடைபெற்றன

மணிப்பூரின் தலைநகரமான இம்பாலில் இடம்பெற்ற தீவைப்பு, துப்பாக்கிப்பிரயோகங்களையடுத்து அங்கு பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து காலவரையின்றி நீடிக்கப்பட்டுள்ளது

இம்பாலில் பல எண்ணெய்த் தாங்கிகள் தீவைக்கப்பட்டுள்ளதுடன் பழவகை பதனிடும் தொழிற்சாலை ஒன்றும் தீவைக்கப்பட்டு முற்றாகச் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இக் கலவரங்களையடுத்து மாநிலத்திலுள்ள சகல பாடசாலைகளும் காலவரையின்றி மூடப்பட்டுள்ளன. (கு)

## ‘கனகருக்கு’ உருவச்சிலை

(மட்டக்களப்பு)

அமரர் எம். கனகரத்தினத்தின் சேவையை நினைவு கூருமுகமாக முழு உருவச்சிலை ஒன்று காரைதீவு சந்தியில் அமையவுள்ளது.

பொத்துவில் தொகுதியின் ... தர் விபுலானந்தரின் ... திறுவப்படும்.

# ஜனநாயக ரீதியில்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

வில்லை. 30 ஆண்டுக் காலமாகத் தமிழினம் இதையுணர்ந்து 1977ம் ஆண்டுத் தேர்தலில் ஏகோபித்த முடிவை எடுத்தது. தமிழர்கள் உரிமை பெற்று வாழவேண்டுமானால், பிரிந்துசெல்வதைத் தவிர வேறு மார்க்கம் இல்லையென்பதைத் தேர்தலில் தீர்மானித்தனர். தமிழ் ஈழம் காண்பதற்குத் தமிழினத்தில் ஒற்றுமை அவசியம் பிரதேச ரீதியாக, மதரீதியாகப் பிரிந்திருந்த தமிழினம் வாழ்வதற்கு ஒற்றுமை அவசியம். அற்பசொற்ப சலுகைகளாலும், பட்டம் பதவிகளாலும் தமிழினம் வாழமுடியாதென்பதை 30 ஆண்டுகள் உணர்த்தியுள்ளது கூட்டணியிலிருந்து திரு. இராசதுரை பிரிந்து சென்றுவிட்டார். திரு குமார் பொன்னம்பலம் தமிழ்க் காங்கிரஸை ஆரம்பித்துள்ளார். தமிழரசுக்கட்சிக்குப் புத்துயிர் கொடுக்க உடுப்பிட்டியில் சிலர் முயற்சியெடுத்துவருகிறார்கள். இதற்கெல்லாம் இடங்கொடுக்காமல் கூட்டணியைப் பலப்படுத்தி, ஒற்றுமையை வளர்க்கவேண்டும்” என்றார்.

ஈழத் தமிழ் எழுத்தாளர் பிரதிநிதி கோவை மகேசன் கூறியதாவது;

“சுயநிர்ணய உரிமை என்ற வார்த்தையை இன்று கூறிச் சில இடதுசாரித் தலைவர்கள் தமிழர்களை ஏமாற்றிவிடுகிறார்கள். ஆனால் சுயநிர்ணயம் பற்றி 1949ம் ஆண்டே தந்தை செல்வா கூறிவிட்டார். அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு ஜனாதிபதி ஜே. ஆர். விடுதலைப் பாதைக்கு முட்டுக்கட்டை போடுகின்றார். வெளிநாடுகளின் ஆதரவில்லாமல் செய்வதற்காகவே அபிவிருத்தி என்று கூறுகிறார்கள் சண்டையா? சமாதானமா? என்று கூறிய ஜனாதிபதி, வடக்கு, கிழக்கு தமிழ்ப்பிரதேசமில்லை என்று கூறிய ஜனாதிபதி அபிவிருத்திச் சபை மூலம் எங்களை வகுதியை ஒப்படைத்துவிடுவாரா? விடுதலையைத் தவிர வேறு சிந்தனை இருக்கக்கூடாது. கொள்கைக் குழப்பம் ஏற்படக்கூடாது” என்றார்.

## தலைவர்கள் வழிவிடவேண்டும்

தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணித் தலைவர் திரு. ஐ. ரி. சம்பந்தன் கூறியதாவது;

“நான் தலைவர் பதவியை விட்டு விலகி மற்றொருவருக்குக் கொடுத்ததுபோல், எமது ஒற்றுமைக்காக நம் தலைவர்களும் விலகி, மற்றவர்களும் பாராளுமன்றம் செல்ல வழிவிடவேண்டும்.

“அமரர் ஜி. ஜி பொன்னம்பலம் நிறுவிய பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையை அமைச்சர் திரு. சிறில் மத்தியூ மூடுவதற்குக் கங்கணங்கட்டியுள்ளார், இதனை எதிர்த்துத் தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணி வடக்கு, கிழக்கில் பாரிய போராட்டம் ஒன்றை நடத்தியதிரும் சீ-நோருக்கு வந்த 15 யந்திரங்கள் மட்டக்குளிக்கு அனுப்பப்பட்டது இதனால் 255 பேர் சீ-நோரில் வேலையிழந்துள்ளனர். இந்த அநிலையை எதிர்த்துப்போராட வேண்டும்.

இதற்கு தமிழ்த் தொழிலாளர் ஒற்றுமைப்புத் தேவை. பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மூடுவதை எதிர்த்து ஆட்சேபக் கூட்டம் ஒன்றை நடத்த முடிவு செய்துள்ளோம்” என்று கூறினார்.

## திருமலையில் நடந்தது

தமிழர் விடுதலைக் கூட்டணி தொழிற்சங்கப் பிரதிநிதி திரு எம். ஆலாலசுந்தரம் கூறியதாவது “56-ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வந்தபின்பொழிவழித்தொழிற் சங்கங்கள் அமைக்கப்பட்டன இடதுசாரித் தலைவர்கள் தமிழ் ஊழியரைக் கைவிட்டனர்.

“திருமலைத் துறைமுகத்தை அரசு கையேற்ற காலத்தில் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் வேலையிழந்தனர். துறைமுகம் தனியார் பொறுப்பில் இருந்தபோது வேலையிலிருந்து நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களை எடுக்கக் கூடாதென இடதுசாரித் தொழிற்சங்கமும், சுதந்திரக் கட்சி தொழிற்சங்கமும் போராட்டம் நடத்தின. இதனால் 700 தமிழ் இளைஞர் வேலை இழந்தனர். இதனால் திருமலையில் 1000 சிங்களவர் வேலைபெற வழி செய்யப்பட்டது. பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மூடிவிட்டு சிங்களப்பகுதியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது இதற்கு இடம் கொடுக்கக் கூடாது” என்றார்.

மத்தியவங்கி தமிழ்ஊழியர் சங்கப் பிரதிநிதி ஈழவேந்தன் கூறியதாவது தலைவர்களிடத்தில் மக்களுக்கு நம்பிக்கை வேண்டும். மக்களிடத்தில் தலைவர்களுக்கு நம்பிக்கை வேண்டும். எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

## தமிழனுக்கு ஒரு நாடில்லை

“உலகில் 32 நாடுகளில் தமிழன் ‘கூலி’ என்று அழைக்கப்பட்டுவருகிறான். தமிழன் வாழாத நாடில்லை. தமிழனுக்கென்றொரு நாடில்லை.

“இன்று சுயநிர்ணயம் என்று வாசுதேவா கூறிவருகிறார். வாசுதேவா ஆட்சி அமைக்கும் போது தமிழினம் இந்த நாட்டில் பூண்டோடு அழிந்துவிடும் தமிழன் இருக்கமாட்டான் தமிழ்ஈழம் முடிந்த முடிவு. மாற்றமுடியாத முடிவு. எப்பொழுது அடையப் போகிறோம்? 3ஆண்டுகள் முடிந்துவிட்டன. எதற்காகத் தயக்கம்? ஏன் இந்தமயக்கம்? தந்தைசெல்வா நடுநடுக்கும் கிழவர். ஆனால் அவரின் கொள்கையில் நடுக்கமில்லை, அவரைப் பார்த்து அரசினர் நடுங்கினர். இன்று அரசினர் நடுங்கவில்லை, நகைக்கின்றனர். தேர்தல் மூலம் எம். பிக்களை அனுப்பிவிட்டால்தமிழ்ஈழம்வந்துசேராது மக்கள் ஆயத்தமில்லை எனத் தலைவர்கள் கூறுகிறார்கள். யார்யாரை ஏமாற்றுகிறார்கள் மக்கள் எப்பொழுதும் தயார்.

“1891-ம் ஆண்டு 4 சிங்களவர்களைக்கூட காணமுடியாத திருமலையில் இன்று சிங்களவர் 37 வீதம் உள்ளனர். தமிழர் 36வீதம் உள்ளதாக கூறுகின்றனர். இவற்றை சிந்தித்துப் பார்க்கவேண்டும்,” என்றுகூறினார். (ஈ)

## இடமாற்றம்

(மன்னார்)

மன்னார் தலைமை நிலையப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பஹித்த ஹெட்டியாராச்சி கிருலப்பனை பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜேஸ்வரி (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
கொஜி - சுஜாதா
தீபம்
(கலர் - புதியபிரதி)

வெலிங்டன் மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ராஜன் - புஷ்பலதா
பூவும் பொட்டும்

## உயர்ரக தென்னங்கன்றுகள்

(பச்சிலைப்பள்ளி)

எதிர்வரும் மரம் நாட்டும் இயக்க காலத்தின்போது பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஐயாயிரம் தென்னங் கன்றுகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவிருக்கிறது. இத்தகைய உயர்ரக தென்னம் பிள்ளைகள் விரைவில் வந்து சேரும். இதற்கான ஏற்பாடுகளை பளை உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்ணர் செய்து வருகிறார்.

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் - சுஜாதா நடித்த
மயங்குகிறள் ஒருமாது
Coming soon
The Living Desert

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30, 2-30 6-30, 9-30
ஜோதி சரோஜாதேவி எம். ஆர். ராதா நடித்த
பாகப் பிரிவினை

லிடோ (யாழ்.நகர்) போன்: 7598
தினசரி 4 காட்சிகள்
மரகதம் (புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராதிகா-ஜெயச்சந்திரன்
தம்பலிங்கம்-டிஸ்கோ சாந்தி-V. R. ஸ்ரீ நடித்த
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக்கலர்)
டைரக்ஷன்: ஜோ தேவ் ஆனந்த்

வின்ஸர் தொலைபேசி: 466
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7-15 10-30
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
★ மரிக்கார் ராம்தாஸ் ★ அப்புக்குட்டி ராஜகோபால்
★ உபாலி செல்வசேகரன்
மற்றும் பலர் நடித்த
கோமாளிகள் (புதிய பிரதி)
குறிப்பு
1978-ம் ஆண்டு எம். ஜி. ஆர். தலைமையில் நடைபெற்ற திரைப்பட விழாவில் சகல நடிக, நடிகைகளும் பங்குபற்றிய செய்திச்சுருளும் காண்பிக்கப்படும். எம் ஜி. ஆர், ராஜா படமாளிகைக்கு விஜயம் செய்துள்ளார். முதல் மந்திரியாக, இந்திய திரைப்பட விழாமூலம் உங்கள் நெடுநாள் ஆவலைப் பூர்த்தி செய்யக் காட்சி தருகின்றார்.
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

SANTHI JAFFNA Phone 7642
Daily 10-30, 2-30, 6-45, 7-00 & 9-30 p.m.
THE LOVES AND TIMES OF
SCARAMOUCHE
COMING: "Shark's Treasure"
(color)

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 21-ந்திகதி (3-5-80) சனிக்கிழமை

மேடம்: வேவுகளை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர், சிக்கலான பிரச்சனைகளை இன்று தவிர்வைப்பது விரும்பத்தக்கது, பெரியவர்களுடன் பகைத்துக்கொள்ள வேண்டாம், நிதானம் வேண்டும்.

இடபம்: ஆனந்தமயமான வாழ்க்கை, அன்பர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும், கணவன் மனைவி உறவுமுறைகள் மிகவும் நெருக்கமாக இருக்கும், சிலருக்கு திடீர் திருமணமும் நடைபெறலாம்.

மிதுனம்: பிரச்னைகள் மேலும் சிக்கலாகலாம், உணவு விஷயத்தில் பிரியக்குறைவு தென்படும், கூர்மையான ஆயுதங்களுடன் பழகாது இருப்பது நன்று, உடல் நலங்களில் கவனம் வேண்டும்.

கடகம்: தன்மான மிகுதிக்கும் தன வரவுக்கும் இடமுண்டு, சிலருக்கு வாகன சுகமும் கிடைக்கும், குடும்பத்தில் தென்றல் வீசும், உறவினர்கள் படையெடுத்து வருவார்கள், கல்வியில் முன்னேற்ற முண்டு.

சிங்கம்: உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள், தொழில் துறையில் முன்னேற்றமான சம்பவங்கள் இடம் பெறும், வெளியிடத்திலிருந்து வரவேற்கத்தக்க செய்தி கிடைக்கும், சிலர் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான இடமாற்றமும் ஏற்படலாம்.

கன்னி: புதுமையான சம்பவங்கள் நடைபெறும், சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு.

துலாம்: பகைமூட்டம் வட்டமிடும், வீணான வார்த்தைகளினால் மனம் புண்படும்.

விருச்சிகம்: சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுவீர்கள்.

தனுசு: தகுதியில் முன்னேற்றமுண்டு, எதிர்கள் பணிவர். எதிலும் வெற்றியுண்டு.

மகரம்: சிறிய விடயத்திற்குக்கூட அதிக ஆத்திரம் தோன்றக்கூடும், மற்றவர்களின் குறுக்குவழித் தலையீடும் இடம் பெறும், பொறுமையைப் பேணவும்.

கும்பம்: நல்லதைச் செய்வீர்கள், நலன் பெருகும், பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள், சமூகத்தில் மதிப்பு உயரும், அரசியல் வாதிகள் அதிர்ஷ்ட தேவதைகளை அணைத்துக்கொள்வர்.

மீனம்: மற்றவர்களின் இன்னல்கள்கண்டு இரக்கம் காட்டுவீர்கள், தாராளமான குணத்தின்மூலம் தனமும்செலவாகும், புண்ணிய யாத்திரையுமுண்டு.

சோதிடக் கலாநிதி
இருமலை
க. வேலுப்பிள்ளை

ஹரன் வட்டுக்கோட்டை
தினசரி 4 காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர்-விஜயகுமாரி
நடித்த
கருணாநிதியின்
பூமாலை (புதிய பிரதி)

# "தோட்டத் தொழிலாளரின் பிரச்னையை ஆராய்க" -- செல்லச்சாமி

(கொழும்பு)

"தோட்டத் தொழிலாளர்கள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதை ஆராய்ந்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி ஐ.தே.கவின் மே தினக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"அரசாங்கத்தின் நல்ல திட்டங்களை வெற்றிகரமாக நடத்துவதற்கு தொழிலாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து ஆதரவு வழங்க வேண்டும். சாதி, மத, மொழி வேறுபாடுகளைக் களைந்து தொழிலாளர்கள் குரல் கொடுக்கும் இந்த நல்ல நாளில் அதற்காகத் திடசங்கற்பம் செய்ய வேண்டும்".

(த)

## உருத்திரபுரம் -- சிவநகர் பஸ்சேவை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள உருத்திரபுரத்துக்கும் சிவநகருக்குமிடையே, விரைவில் பஸ் சேவை ஆரம்பமாக விருக்கிறது.

உருத்திரபுரத்துக்கும் சிவநகருக்குமிடையே பஸ் சேவை இல்லாததால், சிவநகர்ப்பகுதி மக்கள் கிளிநொச்சிக்குப் போவதில் மிகுந்த சிரமப்படுகின்றனர். மக்கள் கால் நடையாகவும், மாட்டுவண்டிகளிலுமே கிளிநொச்சி செல்கின்றனர்.

இப்போக்குவரத்துக் கஷ்டம் குறித்து, உருத்திரபுரம், சிவநகர்ப்பகுதி மக்கள் யாழ் அரசாங்க அதிபரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து யாழ் மாவட்ட செயலாளரும் யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி நடவடிக்கை எடுத்துள்ளார்.

வடபிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவருடன் யாழ். அரசாங்க அதிபர் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து உருத்திரபுரம் - சிவநகர் பஸ் சேவை விரைவில் ஆரம்பமாக இருக்கிறது.

## திருட்டு றேடியோவில் இசையை ரசித்தாராம்

(மன்னார்)

திருட்டு றேடியோவில் இசை கேட்டு ரசித்துக்கொண்டிருந்தவரைப் பொலிசார் கைதுசெய்தனர்.

பேசாலையில் உள்ள வீடொன்றில் தொழில் செய்து வந்த ஓத்தைக்கால் இளைஞர் ஒருவர் அந்த வீட்டிலிருந்த றேடியோவையும் துணிமணிகள் அடங்கிய பெட்டியொன்றையும் இரவில் திருடிச்சென்று விட்டதாக மன்னார்ப் பொலிசில் புகார் செய்யப்பட்டது. சந்தேகநபரைத்தேடி வந்த பொலிசார் சிலாபத்தைச் சேர்ந்த உடப்பு என்னும் இராமத்தில் களவு றேடியோவில் இசையை ரசித்துக் கொண்டிருக்கக் கண்டு பிடித்தனராம்.

பொலிசார் நடத்திய விசாரணையின் இருந்து சந்தேகநபர் சிலாபத்தைச் சேர்ந்தவர் என்று தெரிய வந்தது. தொடர்ந்தும் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

## உற்பத்திப்பொருள் கொள்வனவு

(பச்சிலைப்பள்ளி)

யாழ். மாவட்டத்தில் உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு தகுந்த விலையைக் கொடுக்கும் நோக்கமாக கிளிநொச்சி, இராமநாதபுரம், புத்தூர், வேலணை சாவகச்சேரி, உடுவில், தொல்புரம், புலோலி, பூநகரி, அக்கராயன்குளம் ஆகிய இடங்களிலுள்ள கமநலசேவை நிலையங்கள் மூலம் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் கொள்வனவு செய்யப்படவிருக்கிறது.

சோளம், இறுங்கு, மஞ்சள், உழுந்து, சோயா, அவரை, எள்ளு, செத்தல் மிளகாய், நிலக்கடலை, ஆகிய உணவுப் பொருட்களே இவ்வாறு கொள்வனவு செய்யப்படவிருக்கின்றது. செத்தல்மிளகாய் ஒரு இருத்தல் ரூ. 10-சதம்50 மூலம் கொள்வனவு செய்யப்படும். இதற்கான கொடுப்பனவுகள் யாவும் காசோலை மூலம் மறுநாள் வழங்கப்படும். இது சம்பந்தமான அறிவித்தல்களை யாழ் மாவட்ட கமத்தொழில் சேவை உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் சகல கமநலசேவை நிலையங்களுக்கும் அனுப்பியுள்ளார்.

## புதிய நிர்வாகிகள்

(மன்னார்)

முருங்கன் இந்து இளைஞர் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. எஸ். ஞானகுரு, தலைவர்: வி. சிவசுப்பிரமணியம், உபதலைவர்: வி. லவடாபரி, செயலாளர்: ஏ. என். மகேசன், துணைச் செயலாளர்: கே. புஷ்பராசா.

## சுவீப் முடிவுகள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா 1425 ரூபா வீதம் ஆறுதல் பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு!

| | |
|---|---|
| 01 A 0877 | 12 A 0514 |
| 16 A 0662 | 29 A 0235 |
| 29 A 0590 | 11 B 0622 |
| 21 B 0404 | 29 B 0543 |
| 29 B 0697 | 20 C 0979 |
| 21 C 0921 | 07 D 0855 |
| 17 D 0627 | 14 E 0632 |
| 13 E 0346 | 14 E 0611 |
| 16 E 0613 | 24 E 0025 |
| 11 F 0121 | 22 F 0101 |
| 27 F 0050 | 29 F 0828 |
| 02 G 06 7 | 07 G 0327 |
| 12 G 0083 | 12 G 0848 |
| 13 G 0720 | 19 G 0321 |
| 01 H 0 63 | 03 H 0962 |
| 01 H 0605 | 08 H 0076 |
| 09 H 0703 | 27 H 0607 |
| 28 H 0384 | 02 J 0857 |
| 03 J 0085 | 10 J 0367 |
| 11 J 0259 | 14 J 0634 |
| 15 J 0629 | 22 J 0011 |
| 03 K 0428 | 14 K 0203 |
| 09 L 0964 | 10 L 0740 |
| 14 L 0921 | 17 L 0561 |
| 17 L 0875 | 04 M 0676 |
| 04 M 0896 | 20 N 0790 |
| 24 N 06?4 | 29 N 0705 |
| 13 O 0489 | 10 O 0459 |
| 21 O 0165 | 09 P 0169 |
| 26 Z 0263 | 19 P 0077 |
| 23 P 0533 | 26 P 0218 |
| 27 P 0469 | 20 P 0168 |
| 29 P 0368 | 01 Q 0386 |
| 05 Q 0863 | 21 Q 0588 |
| 29 R 0825 | 12 S 0313 |
| 20 S 0487 | 26 S 0395 |
| 27 S 0522 | 19 T 0740 |
| 30 T 0349 | 04 U 0738 |
| 02 V 0472 | 04 V 0347 |
| 08 V 0856 | 09 V 0688 |
| 12 V 0750 | 11 V 0088 |
| 20 V 0755 | 25 V 0489 |
| 29 V 0924 | 03 W 0887 |
| 10 W 0696 | 13 W 0560 |
| 15 W 0686 | 22 W 0046 |
| 23 W 0601 | 05 X 0298 |
| 06 X 0304 | 18 X 0524 |
| 20 X 0044 | 17 Y 0390 |
| 21 Y 0262 | 28 Y 0509 |
| 01 Z 0160 | 02 Z 0898 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

ராணி (யாழ்நகர்)
கொட்டகை நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகிறது
✶ கமலஹாசன் (இருவேடங்களில்) ✶ ஸ்ரீதேவி மற்றும்பலர் நடித்த
கல்யாண ராமன்
காட்சிநேரங்கள் குறிப்பிட முடியாதளவுக்கு சனநெருக்கடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




றிக்கோவுக்கு வேறு கிளைகள் இல்லை

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

## தூதரக முற்றுகை அமெரிக்க சதியே

லண்டன், மே 2

லண்டனில் உள்ள ஈரானிய தூதரகம் அமெரிக்க செய்தியை அடுத்தே முற்றுகையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு ஈரானில் 50 அமெரிக்கத் தூதரக அதிகாரிகளைப் பணயம் வைத்திருக்கும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதே வேளையில் ஈரானில் தனி ஆட்சிகோரும் குசெஸ்தான மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் மூன்று கொமாண்டோக்களின் முற்றுகை நாடகத்தை அமெரிக்கா நேற்றுக் கண்டித்தது தெரிந்ததே. (இ)

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...
டில்கா வாச்வேக்ஸ்
. பஸ் நிலைய எதிர் மேல்மாடி .
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



# 'விடுதலைப் போராட்டத்தை இனியும் தாமதிக்கக்கூடாது'

## மாவை சேனாதிராசா உரை

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் மத்தியில் உள்ள தொழிற்சங்கங்கள் இணைந்து மேதினம் கொண்டாடுவதுடன் சாதாரண மக்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் விவசாயிகள் மத்தியிலும் சங்கங்களை நிறுவி இணைந்து செயல்பட்டால் தான் தமிழினம் விடுதலை பெற முடியும்.

யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடந்த கூட்டணி மேதின விழாவில் பேசிய தமிழ் இளைஞர் பேரவை பிரதிநிதி மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். எம் பி திரு வெ. யோகேஸ்வரன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் இளைஞர் பேரவை உறுப்பினர்கள் தேசவு துணிகளை விற்பனை செய்தார்கள்.

### இனியும் தாமதிக்கமுடியாது

மாவை சேனாதிராசா மேலும் கூறியதாவது!

விடுதலைப் போராட்டத்தை இனியும் தாமதிக்க முடியாது. வாக்காளர்களை போராளிகளாக மாற்றவேண்டும். இயக்க அமைப்பை இதற்கு ஏற்றபடி மாற்ற வேண்டும். இடைக்கிடை மாறாமல் வாக்காளர்களை போராளிகளாக மாற்றாமல் போராட முடியாது.

77-ம் ஆண்டு தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ் ஈழம் அமைக்க வேண்டும் என முக்கிய தீர்வு எடுத்தார்கள் அந்த முடிவை நிறைவேற்ற நாம் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். இனியும் தாமதிக்கக்கூடாது.

### தலைவர்களை மட்டும் குறைசொல்லக் கூடாது

தமிழ் மகளிர் பேரவை பிரதிநிதி திருமதி நல்லதம்பி கூறியதாவது!

நாம் அடிமைகளாக இருக்கிறோம். எமக்கு சுதந்திரம் இல்லை 'தமிழ் ஈழம்' சும்மா கிடைத்துவிடாது. ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக தமிழினம் போராட வேண்டும் சுதந்திரப் போரில் மகளிர் முக்கிய பங்கு எடுக்க வேண்டும் தந்தை செல்வா போதித்த கட்டுப்பாட்டின் கீழ் தலைவர்களின் கட்டளைகளை ஏற்றுப் போரில் குதிக்க வேண்டும்.

தலைவர்களை மட்டும் குறை சொல்லக்கூடாது. இறுசிறு சலுகைகளுக்காக பட்டம் பதவிகளுக்காக, இடமாற்றப் பதவி உயர்வுக்காக தலைவர்களை கஷ்டப்படுத்தக் கூடாது. (க-இ)

## கருத்தரங்கு

(சுழிபுரம்)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நாளை பிற்பகல் விவசாயக் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. நெல், உப உணவு, மற்றும் விவசாய உற்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளை விளக்கும் பொருட்டு நடைபெறும் இக்கருத்தரங்கில் யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு நா. சிவமுத்துலிங்கம், வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில் வடிவேல் வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு உட்பட மற்றும் பல விவசாய உத்தியோகத்தர்களும் பங்கு கொண்டு கருத்துரை வழங்குவார்கள். பண்ணாகம் இளம் விவசாயிகள் கழகம் இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது. (இ)

## தொண்டமான்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகிறார்.

திருநெல்வேலியில் இரண்டு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும், பால்சேகரிப்பு நிலைய திறப்பு விழாவில், கலந்து கொள்வதற்காகவே திரு. தொண்டமான் யாழ்ப்பாணம் வருகிறார். பால் சேகரிப்பு நிலைய கட்டிட வேலைகள் மிகதுரிதமாக நடைபெற்று இம்மாத இறுதிக்குள் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கபடுகிறது. (கெ-இ)

# இந்திய வானொலியில் தேர்தல் பிரசாரம்

## 7-ம்திகதி தி மு க. மறுநாள் அதிமுக

சென்னை, மே 2

எதிர்வரும் தமிழக சட்டசபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுக்கு சென்னை வானொலி மூலம் தேர்தல் பிரசாரம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது

தொலைக்காட்சிகளில் இக்கட்சித்தலைவர்கள் தோன்றி தேர்தல் உரைகளை நிகழ்த்தவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது

வானொலியில் இரண்டு கட்டமாக கட்சித்தலைவர்கள் பிரசாரஉரைகளை நிகழ்த்துவர்

முதல்கட்டிடத்தில் பிரசார உரை நிகழ்த்தும் கட்சிகளும் திகதி விபரங்களும் வருமாறு

இம்மாதம் 7 ம் திகதி—தி மு க 8-ம் திகதி அ தி மு க 9-ம்திகதி இந்திரா கங்கிரஸ், 10—பாரதிய ஜனதா, 12—சரண்சிங் ஜனதா, 13—ராஜ் நாராயண் ஜனதா, 14—மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் 15—இந்திய கம்யூனிஸ்ட், 16—சந்திர சேகர் ஜனதா, 17—தேவராஜ் அர்ஸ் காங்கிரஸ்.

தினமும் இரவு 7-45 மணி முதல் 8 மணிவரை இந்நிகழ்ச்சி இடம்பெறும். (இ)

ST. JOHN'S COLLEGE, JAFFNA.

VOCATIONAL TRAINING INSTITUTE.

Applications are invited for a two year course in Motor Engineering leading to the Diploma in Automobile Engineering and A. M. I. M I. (London).

Staff: Qualified Lectures trained by Tata Engineering & Locomative Co., and Ashok Leyland (India)

Medium: English & Tamil.

Qualifications: Should be over 16 years and must have passed in atleast four subjects at the G C E (O L.) or N C G E. examination with English as one of the four.

FEES: Rs. 400/- per year or Rupee Forty per month Theory and Practical Classes will be conducted at St. John's College, between 9 a m. and 4 p. m The Course will commence on the 2nd of June 1980.

Applications (in the student's own handwriting) close on 12th May Scholarship will be awarded to deserving students.

PRINCIPAL,
St John's College, Jaffna.
11th April 1980 5476

## சென்னை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

உட்பட சகலரும் வெளியேற்றப்பட்டு நீதிமன்றக் கட்டடம் சோதனையிடப்பட்ட பின்னரே வெடிகுண்டு தகவல் புரளியானது என்பது தெரியவந்தது. (இ)

## கூட்டுறவுச்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றைய இயக்குநர்களை ஊழியர்கள் 22 ஆயிரம் பேரிடமிருந்து இத்தொகையை அரசாங்கம் அறவிட உள்ளது.

இதனை விரைவாகச் செய்யும் பொருட்டு 15 உயர்தரத்திலான அதிகாரிகளையும் மற்றும் ஊழியர்களையும் புதிதாக நியமனம் செய்ய மந்திரிசபை அங்கீகாரம் அளித்துள்ளது. (ம-இ)

சி. எம். ரி. இரவு பஸ் சேவை

அநேக பிரயாணிகளின் வேண்டுகோளுக்கிணங்க
பகல் நேரத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த மேற்படி
கடுகதி பஸ் சேவை
ஏப்ரல் மாதம் 29-ந் திகதியிலிருந்து
இரவு சேவையாக மாற்றி பின்வரும் நேரப்படி
யாழ்ப்பாணம் - கொழும்பு
கொழும்பு - யாழ்ப்பாணம்
கடுகதி பஸ் சேவை நடாத்தப்படுவதை சகல பிரயாணிகளுக்கும்
அறியத்தருகிறோம்.

| புறப்படும் நேரம் | புறப்படும் இடம் | போய்ச்சேரும் நேரம் |
|---|---|---|
| இரவு 9-00 | யாழ்ப்பாணம் (யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க தலைமைக் காரியாலயம்) | கொழும்பு 6-00 காலை |
| இரவு 8-00 | கொழும்பு (வெள்ளவத்தை) | யாழ்ப்பாணம் 5-30 காலை |

பயணச் செலவு
யாழ்ப்பாணம் - கொழும்பு - ஒரு வழி - ரூபா 45-00 மட்டும்
யாழ்ப்பாணம் - அனுராதபுரம் - ஒரு வழி - ரூபா 30-00 மட்டும்
ஆசனப் பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளவும்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்,
420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி இல. 370, 438 & 537)

## மரண அறிவித்தல்

### நேசமணி மகேசன்

துன்னாலை தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற முதலியார் மகேசனின் அன்பு மனைவியும், கணேசன் (ஆசிய அபிவிருத்தி வங்கி, மணிலா) சிவதேவி, அருணகிரி நாதன் (பொறியியலாளர், இந்தோனேஷியா) ஆகியோரின் அன்புத்தாயாரும், வத்சலா, டாக்டர் சத்திய நாதன் (உலக சுகாதார நிறுவனம், பாங்கொக்) லோகநாயகி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற நல்லநாயகம் நடராசா, காலஞ்சென்ற முருகேசபிள்ளை (உதவி அரசாங்க அதிபர்), பரமேஸ்வரி குலவீரசிங்கம், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் ஆகியோரின் சகோதரியும் சாந்தா, சிறீகரன், சிறீதேவி, இராகவன், இராமேஸ், குமார், கரிகரன், சாமினி ஆகியோரின் அருமைப் பாட்டியுமான நேசமணி அம்மையார் 28-4-80 அன்று காலமானார். அன்னாரின் ஈமைக்கிரிகைகள் நாளை (4-5-80) ஞாயிறு காலை 10 மணிக்கு துன்னாலையில் நடைபெறும். உற்றார் உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும். 5632

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மே 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Ceneral Post office Sri Lanka uuder No CE/8948/ 78. The Eelanaadu, Post Box No 49, Telegram: Eelanaadu, Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org